பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | தை 03 | ஞாயிற்றுக்கிழமை 20.01.2019 | கதிர் 73

## இது ரகசியம் அல்ல!

முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரனின் 'தமிழ் மக்கள் கூட்டணி'யின் முதலாவது மத்திய குழுக் கூட்டம் இன்று யாழ்ப்பாணத்தில் அவரது இல்லத்தில் நடைபெறுகின்றது எனத் தெரிகின்றது.

கட்சியின் முக்கிய பொறுப்புகளுக்கான நியமனங் பக்கம் 02 »

# மாகாணத் தேர்தல் மே மாதம் நடக்கும்!

## கூட்டணி அமைப்பதில் கட்சிகள் தீவிரம்

கொழும்பு, ஜன. 20

மாகாண சபைகளுக்கான தேர்தல் மே மாதம் நடைபெறலாம் என நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல் நடத்தப்படவேண்டும் எனத் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் அதிகாரிகளும், சிவில் அமைப்புகளின் பிரதானிகளும் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். பக்கம் 11 »

## அமெரிக்கா செல்கின்றன மன்னார் எலும்புக்கூடுகள்!



மன்னார், ஜன. 20

மன்னார் சதொச வளாகத்திலுள்ள மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட மனித பக்கம் 11 »

## வடக்குப் பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றங்கள் உடனடியாக ரத்து

யாழ்ப்பாணம், ஜன. 20

வடக்கில் பணியாற்றும் பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பக்கம் 11 »

## அமெ.–இலங்கை பாதுகாப்பு உடன்பாடு மிக ஆபத்தானது

### எச்சரிக்கின்றார் தயாசிறி ஜயசேகர



கொழும்பு, ஜன. 20

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ள பாதுகாப்பு உடன்பாடு, இலங்கையின் தேசிய பாதுகாப்பு, பிராந்திய ஒருமைப்பாடு, இறைமை ஆகியவற்றின் மீது மோசமான தாக் பக்கம் 11 »

## சர்வதேச குற்றக் விசாரணையை மைத்திரி எதிர்கொள்ள நேரிடும்!

### ஜனாதிபதியின் பிலிப்பைன்ஸ் உரை குறித்து மனித உரிமை அமைப்புகள் கடும் எச்சரிக்கை



கொழும்பு, ஜன. 20

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி முன்னெடுக்கும் போதைப்பொருளுக்கு எதிரான யுத்தத்தைப்பின்பற்றப் போவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளமைக்கு, மனித உரிமை அமைப்புகள் கடும் கண்டனம்

## தமிழில் புலமை பெற்றவரே ஜனாதிபதியாக வேண்டும்!

### குமார வெல்கம வலியுறுத்து



கொழும்பு, ஜன. 20

தற்போது நாட்டில் காணப்படுகின்ற சூழ்நிலைக்கு அமைய ஜனாதிபதித் தேர்தலே நடைபெறவேண்டும் பக்கம் 11 »

## ஊடக அமைப்புகள் ஜனவரி 29ஆம் திகதி பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொழும்பு, ஜன. 20

ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்ட குற்றவாளிகள் சுதந்திரமாக உலாவுகின்றனர். அவர்கள் இன்னும் தண்டிக்கப்படவில்லை.

எனவே, நீதியை நிலைநாட்டுமாறு கோரி பொலிஸ் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்வதற்கு இலங்கையிலுள்ள ஊடக அமைப்புகள் தீர்மானித்துள்ளன.

இதுதொடர்பில் ஊடக அமைப்புகளால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில், ஜனாதிபதி மைத்திரி பக்கம் 11 »




## ரயிலுடன் மோதியது மோ.சைக்கிள் இருவர் உடல் சிதறிப் பரிதாபச் சாவு!

கொழும்பு, ஜன. 20

ஜா–எல, டுதெல்ல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற ரயில் – மோட்டார் சைக்கிள் விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்று ரயிலுடன் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற் பக்கம் 11 »

## கைதிகள் மீதான தாக்குதல்: ஐ.நாவிலும் எதிரொலிக்கும்

கொழும்பு, ஜன. 20

அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலையிலுள்ள கைதிகள் தாக்கப்பட்ட காணொளி, சமீபத்தில் ஊடகங்களுக்குவெளியிடப்பட்ட நிலையில், இதுதொடர்பாகஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கவனத் பக்கம் 11 »

## அரசமைப்பை மாற்றுவதன் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினை தீராது!

### கூட்டமைப்புக்கு சம்பிக்க ஆலோசனை

கொழும்பு, ஜன. 20

அரசமைப்பை மாற்றியமைப்பதன் ஊடாகத் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியாதென்பதை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென பக்கம் 02 »

## புதிய அரசமைப்பினால் நாடு பிளவுபடும் சாத்தியமில்லை

### மல்வத்தை பீடாதிபதி நம்பிக்கை



கொழும்பு, ஜன. 20

புதிய அரசமைப்பைக் கொண்டு வந்து நாட்டைப் பிளவுபடுத்தும்தேவைஎவருக்கும் இருக்காது என தான் நம்பு பக்கம் 02 »

## போதைப்பொருள் கடத்தலை ஒழிக்க இலங்கைக்கு பிலிப்பைன்ஸ் உதவி

### நிபுணர் குழு விரைவில் கொழும்பு வரும்

மணிலா, ஜன. 20

இலங்கையில் போதைப்பொருள் கடத்தலை ஒழிப்பதற்கு பிலிப்பைன்ஸ் அரசு உதவ முன்வந்துள்ளது. இதற்கான தொழிநுட்ப ஆலோசனை சேவைகளை வழங்குவது குறித்து ஆராய்வதற் பக்கம் 02 »

## பாதுகாப்புப் பணியகத்தை மீளவும் கொழும்பில் அமைத்தது பிரிட்டன்



### 10 ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்

கொழும்பு, ஜன. 20

சுமார் பத்து ஆண்டுகளுக்குப்பின்னர் இலங்கையில் உள்ள பிரிட்டன் தூதரகத்தில், வதிவிடப்பாதுகாப்பு ஆலோசகர் பணியகத்தைப் பிரிட்டன் பக்கம் 02 »

## 1000 ரூபாவுக்கு ஆப்பு!

### 700 ரூபாவை ஏற்பதற்கு தொழிற்சங்கங்கள் முடிவு?

கொழும்பு, ஜன. 20

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு முதலாளிமார் சம்மேளனம் மறுப்பு பக்கம் 11 »

# சிவனொளிபாதமலைக்கு சென்ற பெண் திடீர்ச் சாவு

சிவனொளிபாதமலைக்குயாத்திரைசென்றபெண்ணொருவர் திடீரென வழியிலே உயிரிழந்துள்ளார் எனநல்லதண்ணிப்பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

நேற்றுச் சனிக்கிழமை காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் பொல்கஸ் ஒவிட்ட பகுதியைச் சேர்ந்த கே.ஜே.சந்ராவதி என்ற (46 வயது) இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

சிவனொளிபாதமலையின் அடிவாரத்திலிருந்து தனது யாத்திரையை மேற்கொண்ட அந்தப் பெண், வழியில் திடீரென உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் சம்பவத்தில் உயிரிழந்த பெண்ணின் உடல், பிரேத பரிசோதனைக்காக மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையின் வைக்கப்பட்டுள்ளது.

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறார் எனக் கண்டி மல்வத்தை பீடாதிபதிதிப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கள தேரர் தெரிவித்துள்ளார்.

உத்தேச அரசமைப்பு யோசனைகளடங்கியநிபுணர்குழுஅறிக்கையில்நல்லவற்றைப்போன்றே சில குறைபாடுகளும் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புதிய அரசமைப்பை தயாரிப்பதற்கான அரசமைப்புச் சபை நியமித்திருக்கும்நிபுணர்கள் குழுவின் அறிக்கையை மல்வத்தை, அஸ்கிரிய பீடங்களுக்குக் கையளித்து தெளிவுபடுத்தும் பொருட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர் குழு நேற்று முன்தினம் மஹா சங்கத்தினரைச் சந்தித்தது.

சபைமுதல்வரும் மலைநாட்டு உரிமைகள்அரசதொழில்முயற்சி அபிவிருத்தியமைச்சரும் கண்டி மாவட்ட அபிவிருத்தி அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தலைமையிலான இந்தக் குழுவில் அமைச்சர்களான ரஞ்சித் மத்தும பண்டார தயா கமகே இராஜாங்க அமைச்சர் லக்கி ஜயவர்தன, நாடாளுமன்ற உறுப்பினர்களான பாலித ரங்கே பண்டார, மயந்த திசாநாயக்க ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இந்த அரசமைப்பு யோசனை இரண்டு, மூன்று வருடங்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் ஒரு திட்டமெனவும் அவசரப்பட்டு கொண்டு வரப்பட்டதொன்றல்ல என்பதைத் தான் புரிந்து கொண்டிருக்கிறார் எனவும் தெரிவித்த மல்வத்தை பீடாதிபதி, ஆனால் தற்போதைய நிலையில் புதிய அரசமைப்பைவிட ஒரு தேர்தல் ஒன்றுக்குச் செல்வதே உசிதமானதாகத் தான் கருதுவதாகவும் தெரிவித்தார்.

சகல தேர்தல்களையும் நடத்திய பின்னர் அரசமைப்பொன்றை உருவாக்குவது குறித்து சிந்திப்பது தவறில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்துவரும் குறுகிய காலத்துக்குள் பல தேர்தல்கள் நடத்தப்படவிருக்கும் நிலையில் எந்தத் தேர்தலை முதலில் நடத்துவது என்று எதுவும் கூற முடியாதிருப்பதாகவும், எனினும் மக்களின் பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வுகாண்பது தொடர்பில் அரசு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பின்னர் இந்தக் தூதுக்குழு அஸ்கிரிய பீடாதிபதி வரகாகொட ஞானரத்தன தேரரைச் சந்தித்தது. தற்போது அரசமைப்பு கொண்டு வரப்படவோ சட்டவரைவு தயாரிக்கப்படவோ இல்லையெனவும் அரசியல் கட்சிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண முதலமைச்சர்கள், சிவில் அமைப்புகள், மனித உரிமைகள் பிரதிநிதிகள் உள்ளிட்ட குழுவொன்று யோசனைகளைவழங்கியிருக்கின்றது. இதை முன்வைத்தே நிபுணர்கள் குழுவின் அறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளது. இதை வைத்து நாடாளுமன்றத்தில் கலந்துரையாடிச்சகலதரப்பினரும் உடன்பாட்டுடன்தான்அரசமைப்புச் சட்டவரைவைக் கொண்டுவர முடியும் எனவும் அமைச்சர் லக்ஷ்ன் கிரியெல்ல இங்கு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியால் 2/3 பெரும்பான்மை இல்லாமல் அரசமைப்பைக் கொண்டுவருவதாக இருந்தால்அதனை நிறைவேற்றுவதற்குக் கட்டாயமாக எதிர்த்தரப்பு ஆதரவுஅவசியம்என்பதனையும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

## இனி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கட்சியின் ஸ்தாபகர் என்ற நோக்கில் அவரே செய்கின்றார்.

ஏதேனும் குழுக்கள் அமைத்து, ஜனநாயக மரபுப்படிவிடயங்களை ஆராய்ந்து, இந்த நியமனங்கள் வழங்கப்பட்டனவாகத்தெரியவில்லை. முற்றும் முழுதாக அவரின் சுயவிருப்பின்பேரில்–தற்றுணிவில் –முழுக் கட்சிக் கட்டமைப்பும் உருவாக்கப்பட்டிருப்பதுஜனநாயக அரசி யல் என்று கூறமுடியுமா என்பது கேள்விக்குரியதே.

எனினும் ஒரு கட்சியின் உருவாக்கத்தில் – ஆரம்பத்தில் – இத்தகைய போக்கு தவிர்க்க முடியாததே. அதுவும், விக்னேஸ்வரன் என்ற தனி மனிதனைச் சுற்றி – அவரின் தனித்துவத்தையே பிரதான மைய அச்சாக வைத்து – ஒரு கட்சி கட்டி எழுப்பப்படும் போது, இதனைப் புரிந்து கொள்ள முடியும்.

புதிதாகத் தொகுதி ரீதியாக உறுப்பினர்களைச் சேர்த்து, அவர்கள் மத்தியில் ஜனநாயக ரீதியான முறையில் தொகுதிக் கிளைப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து, அவர்களைஒன்றிணைத்து மாவட்டக்கிளைகளைஸ்தாபித்து, அந்தப்பிரதிநிதிகளையும்கொண்டு கட்சியின் மத்திய குழுவையும், தலைவர், செயலாளர் மற்றும் இதர பொறுப்பு வாய்ந்த நிர்வாகிகளையும்தேர்வுசெய்வதென்றால் நீதியரசர் விக்னேஸ்வரன் இப்போதைக்குக் கட்சியை நடத்த முடியாது என்பது புரியத்தக்கதே.

எழுபது வருடப்பழமைவாய்ந்தது என்று கூறப்படும் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் கூட அந்த ஜனநாயகம் இல்லை. கட்சியின் தேசிய மாநாடுகளில் கூட நிர்வாகிகள் தெரிவு என்று ஒரு நிகழ்ச்சி நிரல் இருக்கும். அந்த நிகழ்வு இடம்பெறும்போது மாவை சேனாதிராசா எழுந்து ஒரு பட்டியலை வாசிப்பார். இன்னார், இன்னார், இன்ன, இன்ன பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள் என்று அவர் அறிவிப்பார். அதில் தங்கள் பெயர்கள் இருந்தால்தாங்களும்அந்தந்தப்பதவிக்குத்தெரிவு செய்யப்பட்டோம் என்று கருதிக் கொண்டு சம்பந்தப்பட்ட கட்சி உறுப்பினர் போக வேண்டியதுதான். இல்லையோ, பெயர் இல்லாவிட்டால், போன தடவை ஒரு முறை ஒரு பதவிக்கு என்னைப் போட்டார், இந்த முறை என்னை வெட்டிவிட்டார் மாவை என்று சம்பந்தப்பட்ட உறுப்பினர் தமக்குள் முணுமுணுத்துக் கொண்டு போக வேண்டியது தான்.

பதவியில் இருப்பவரைத்தாம் அறிவிக்கும்பட்டியல்மூலம்வெட்டி அவருக்குக் கல்தா கொடுக்கின்றார் என்ற தகவலைக் கூட சம்பந்தப்பட்ட முக்கிய பொறுப்பில் இருக்கும்உறுப்பினருக்குமாவை முற்கூட்டிச் சொல்லமாட்டார்.

இப்படி மாவையர், கட்சி நிர்வாகிகள் பட்டியலை தம் விருப்பப்படி அறிவித்து, அதனை ஜனநாயக முறையிலான தேர்வு என்று அறிவிக்கும் சர்வாதிகாரத்துக்குப் பின்னாலும் சில கூத்துகள் அரங்கேறும்.

வேலையேசெய்யாததன் அல்லக்கையை எந்தவித மாற்றமுமின்றி அதே பதவியில் அவர் அறிவிப்பார். உதாரணம்: கடந்த இரண்டு தேசிய மாநாடுகளிலும் கணக்கு அறிக்கை சமர்ப்பிக்காத பொருளாளர் கனகசபாபதி. இனி நடக்கப் போகும் மாநாட்டிலும் அவரே பொருளாளராக இருந்தாலும் – ஏன் மாவை தலைவராக இருக்கும் வரை ஆயுள் காலப் பொருளாளராக அவரே இருந்தாலும் – ஆச்சரியப்படுவதற்கு இடமில்லை. ஏனெனில் அப்படியானவர்கள் நீடித்தால்தான் தமிழரசுக் கட்சியின் மாட்டின் வீதி, யாழ் அலுவலகம் தொடர்ந்து 'வயோதிப மடம்' ஆக நீடிக்க முடியும்!

★ தமிழரசுக்கட்சியின்யாப்பில் இல்லாதநிர்வாகப்பதவிகளுக்கும் ஆள்களை – தனது நம்பிக்கைக்குரியவர்களை – நியமித்து அறிவிப்பார் மாவையர்.

★ சில சமயங்களில் மாநாட்டின் முதல் நாளில் புதிய கட்சி நிர்வாகிகள் அறிவிக்கப்படுவர். திடீரென அடுத்த நாள் மாநாட்டில் இன்னொருவர் இன்னொரு பதவிக்கு புதிதாக நியமிக்கப்படுகின்றார் என அவர் அறிவிப்பார்.

இப்படிஜனநாயக முறைமைகளுக்கு மாறாகப் பல திருக் கூத்துக்கள், திருவிளையாடல்கள், தமிழரசுக் கட்சியிலேயே நடக்கும்போது, புதிதாக உருவாக்கப்படும் கட்சியின் ஆரம்ப நிர்வாகிகளை – ஸ்தாபகப் பொறுப்பாளர்களை – அதன் ஸ்தாபகரே நியமிக்கின்றமையை ஜனநாயக விரோதச்செயற்பாடு என்று எப்படிக் கூற முடியும்? ஆகவே நீதியரசர் விக்னேஸ்வரனின் அந்த நடவடிக்கையை இப்போது விமர்சிக் காமல் விட்டு விடுவோம்.

இன்றைய கூட்டத்தை அடுத்து கட்சி நிர்வாகிகள் பட்டியலை அவர் ஊடகங்களுக்கு வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. கட்சியின் ஆரம்ப நிகழ்வுக்குப் படம் எடுக்க மட்டும் ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படுவர் என்றும் பிறகு எல்லாம் மூடிய அறையில் எனவும் கூறப்படுகின்றது.

நல்லது. நடக்கட்டும்.

இன்றையகூட்டத்தின்பின்னர் – வடக்கு, கிழக்கின் முழுப் பிரதேசத்துக்கும் பொறுப்பான கட்சி நிர்வாகிகள் அறிவிக்கப்பட்ட பின்னர் – தொகுதிகள் தோறும் கட்சி அலுவலகங்களை அமைத்துச் செயற்படுவதற்கு விக்னேஸ்வரன் திட்டமிடுகின்றார் என்றும் கூறப்படுகின்றது.

அடுத்த ஒரு வருடத்துக்குள்ளாவது அவரது கட்சி ஜனநாயக வழிக்குத் திரும்பி விட வேண்டும். அடுத்த வருடம் நிர்வாகிகள் – அதுவும் அவர் தற்போது தனக்குத் தானே வழங்கிக் கொண்ட – கட்சியின் செயலாளர் நாயகம் பதவி வரை அனைத்துக்குமான நிர்வாகிகள் – கட்சியின் கீழ்மட்டத்திலிருந்து உயர்நிலை வரை – உரிய தேர்தல் முறைப்படியும்நீதியானஜனநாயகப் பண்புகளுக்கு அமைவாகவும் நடத்தப்பட வேண்டும்.

இல்லையேல், தமிழ் மக்கள் கூட்டணியும் கூட இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றிலிருந்து வேறுபடாத *"ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்"* தாம் என்ற எண்ணமே தமிழ் மக்கள் மனதில் வந்து விடும். இதனை நீதியரசர் விக்னேஸ்வரன் புரிந்து நடந்தால் நல்லது.

-மின்னல்-

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் அமைத்துள்ளது.

பொறுப்புக்கூறல் விவகாரங்களினால், ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில், இலங்கையுடனானபாதுகாப்பு உறவுகளை பிரிட்டன் நிறுத்தி வைத்திருந்தது.

பாதுகாப்பு உறவுகளை மீண்டும் ஏற்படுத்திக் கொள்வதாக, 2015இல் அறிவித்ததில் இருந்து, இலங்கையுடனான பிரிட்டனின் பாதுகாப்பு உறவுகளை, புதுடில்லியில் இருந்து, வதிவிடமற்ற பாதுகாப்பு ஆலோசகர் ஒருவர் கையாண்டு வந்தார்.

இந்த நிலையில் மீண்டும் கொழும்பில், வதிவிடப் பாதுகாப்பு ஆலோசகர்பணியகத்தைஅமைக்கப்பிரிட்டன்நடவடிக்கைஎடுத்துள்ளது.

பிரிட்டன் தூதரகத்தின் புதிய பாதுகாப்பு ஆலோசகராக பொறுப்பேற்றுள்ள கேணல் டேவிட் ஆஷ்மன் இலங்கையின் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியான, அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவை கடந்த வியாழக்கிழமை அவரது பணியகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

அத்துடன், இலங்கை முப்படைத் தளபதிகளையும் அவர் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்புகளில், புதுடில்லியில் இருந்து வதிவிடமற்ற பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றிய குறூப் கப்டன் பிரேசர் நிக்கல்சனும் கலந்து கொண்டார்.

கொழும்பில் உள்ள பிரிட்டன் தூதரகப் பேச்சாளர் இதுபற்றி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், கொமன்வெல்த் பங்காளர் மற்றும் நண்பன் என்ற வகையில், இலங்கையுடன் பாதுகாப்பு விவகாரங்களில் நெருக்கமாகப் பணியாற்றவும், இலங்கை ஆயுதப்படைகள் தம்மை நவீனமயப்படுத்துவதற்கும், மறுசீரமைப்பதற்கும் ஆதரவு அளிப்பதற்கும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குச் சாதகமான பங்கை அவர்கள் வகிப்பதற்கும், கொழும்பில் வதிவிடப் பாதுகாப்பு ஆலோசகர் பணியகம் மீண்டும் அமைக்கப்படுவது உதவியாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. (ஐ)

## போதைப்பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காக நிபுணர்கள் குழு ஒன்று விரைவில் இலங்கை வருகை தரவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிலிப்பைன்ஸ் பயணத்தின் போது, இலங்கைக்குக் கிடைக்கப்பெற்ற மற்றுமொரு முக்கிய நன்மையாக இந்த உதவி அமைந்துள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

தனது அரச முறைப் பயணத்தின் இறுதி நாளான நேற்று முற்பகல் பிலிப்பைன்ஸ் பொலிஸ் தலைமையகத்திற்குச் சென்ற ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன, அதன் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவுக்கும்சென்றிருந்தார். இதன் போது ஜனாதிபதியை பிலிப்பைன்ஸ் நாட்டின் தேசிய பொலிஸ் சேவை பிரதானி, அபாயகர ஔடத கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் ஆகியோர் வரவேற்றனர்.

பிலிப்பைன்ஸ் அரசு முன்னெடுத்துள்ள போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் குறித்த கண்காட்சி ஒன்றையும் ஜனாதிபதி பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து பொலிஸ் சேவை பிரதானிஉள்ளிட்ட போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் மூத்த அதிகாரிகளைச் சந்தித்த ஜனாதிபதி, போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான திறந்த போர் ஒன்றைத் தற்போது தனது தலைமையில் இலங்கை முன்னெடுத்து வருவதாகக் குறிப்பிட்டார்.

பூகோள முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடம் காரணமாக போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு இலங்கை முக்கிய பரிமாற்ற மத்திய நிலையமாக இருப்பதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, போதைப்பொருள்களை இலங்கைக்குக் கொண்டு வருவதைத் தடை செய்வதற்கு அனைத்து நட்பு நாடுகளினதும் உதவியை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

சட்டவிரோதப் போதைப் பொருள்களைத்தடுப்பதற்குபிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரொட்ரிகோ டியுடேர்ட் முன்னெடுத்துள்ள முக்கிய போராட்டத்தைப் பாராட்டிய ஜனாதிபதி, பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியின் இந்த சேவையை மதிக்கும் வகையிலேயே தான் பிலிப்பைன்ஸுக்கு பயணம் மேற்கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

போதைப்பொருள் கடத்தல் உலகில் பெரும்பாலான நாடுகளுக்கு முக்கிய சவாலாக இருந்து வருகின்றபோதும் சில அரசியல்வாதிகளும் அதில் தொடர்புபட்டிருப்பதன் காரணமாக அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளதென்பதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இது போதைப்பொருள்ஒழிப்புநடவடிக்கைகளில் உள்ள பெரும் பிரச்சினையாகுமென்றும் தெரிவித்தார்.

இலங்கையில் போதைப் பொருள் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளுக்காக முன்னெடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி விவரித்த ஜனாதிபதி, அத்தகைய சுற்றி வளைப்பு நடவடிக்கைகளின்போது போதைப் பொருள் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகளும் பொலிஸ் அதிகாரிகளும் உயிரிழந்த சந்தர்ப்பங்களும் உள்ளதாகக் குறிப்பிட்டார்.

மேலும் போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான போராட்டத்தை தான் 45 வருடங்களுக்கு முன்னர்ஒரு அரசசேவையாளராக இருக்கும்போதே ஆரம்பித்தார் எனத் தெரிவித்த ஜனாதிபதி, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவராகவும், பிரதி அமைச்சராகவும், அமைச்சராகவும் அதற்காக முன்னெடுத்த விரிவான நிகழ்ச்சித் திட்டங்களுக்காக உலக சுகாதார தாபனமும்தனக்குச்வதேசவிருது ஒன்றை வழங்கி கௌரவித்தமை பற்றியும் நினைவுகூர்ந்தார்.

இன்றுஜனாதிபதிஎன்ற வகையில் இலங்கையில் சட்டவிரோத போதைப்பொருள் சவாலை வெற்றிகொள்வதற்கு முக்கியமான ஒரு போராட்டத்தில் தான் ஈடுபட்டுள்ளதாகக் குறிப்பிட்ட மைத்திரிபால சிறிசேன, இதற்காக இவ் வருடமும் பல்வேறு முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸில் போதைப் பொருள் கடத்தலுக்கு எதிராக அந்த நாட்டின் பொலிஸ் அதிகாரிகள் மேற்கொண்டு வரும் முக்கிய பணிகளை ஜனாதிபதி பாராட்டினார்.

இலங்கையின் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஜீவ மெவத்தவும் இந்த நிகழ்வில் பங்குபற்றினார் –என்றுள்ளது.

(ஐ)

# தமிழரின் இனப் பிரச்சினைத் தீர்வுக்காக விதையாகியவர்கள் ஊடகவியலாளர்கள்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு



வவுனியா, ஜன. 20

தமிழர்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக தம்மை விதையாக்கியவர்கள் ஊடகவியலாளர்கள் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியா தரணிக்குளம் பாடசாலை மைதானத்தில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ராகுலன் தலைமையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின் பின் ஊடகங்கள் மீது அண்மைக் காலமாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் முன்வைத்து வரும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

சுமந்திரனின் கருத்துக்கு என்னால் பதில் சொல்ல முடியாது. எனினும் போர்க்காலத்திலும் கூட எங்கள் மக்களின் பிரச்சினைகளை எழுதிய பல ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் பல தியாகங்களையும் செய்திருக்கிறார்கள். ஆகவே விமர்சனம் என்பது ஒருவருடைய மனதைப் புண்படுத்தாத ரீதியில் செய்யப்படவேண்டும் என்பது என் கருத்து.

ஆனால் விமர்சனங்கள் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். விமர்சனங்களின் ஊடாகத்தான் அரசியலிலும், வேறு சில விடயங்களிலும் அதிகளவில் செய்வதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கும். ஆகவே எங்களது போராட்ட காலத்திலே முன்னணி வகித்த பல ஊடகங்கள், அதிலும் குறிப்பாக தமிழ் ஊடகங்களின் செயற்பாடுகள் மற்றும் அவர்களின் தியாகங்கள் மறக்க முடியாதவை. பல ஊடகவியலாளர்கள் இறந்தும் இருக்கிறார்கள்.

நான் மிகவும் மதிக்கின்ற– தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்திற்கு காரணமாக இருந்த தராக்கி சிவராம் மற்றும் யாழ்ப்பாணத்திலும் பல ஊடகவியலாளர்கள் மரணித்திருக்கிறார்கள்.

இவர்களது தியாகங்களும் எங்களது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு விதையாக அமைந்திருக்கின்றன. தமிழ் ஊடகங்களின் தியாகங்கள் துணிச்சலான எழுத்துக்களையும் எந்தக் காலத்திலும் விட்டுக்கொடுக்க முடியாது–என்றார்.

(ஐ–100)

## சந்தைக்குச் சென்றவர் வீதியில் மயங்கிச் சாவு!

யாழ்ப்பாணம், ஜன. 20

சாவகச்சேரி சந்தைக்குச் சென்ற குடும்பத் தலைவர் வழியில் மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார். சாவகச்சேரி உதயசூரியன் வீதியில் நேற்று முன் தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதே இடத்தைச் சேர்ந்த கிட்டினன் செல்வம் (வயது–53) என்பவரே உயிரிழந்தவராவார்.

1992 ஆம் ஆண்டு சாவகச்சேரிப் பொதுச் சந்தையில் உலங்குவானூர்தி நடத்திய வான்வழித் தாக்குதலின்போது கண்ணில் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்தார். அது தொடர்பான இழப்பீடு இதுவரை வழங்கப் படவில்லை.

இது தொடர்பாக தென்மராட்சிப் பிரதேச செயலகம் யாழ். மாவட்ட செயலகத்துக்குப் பல தடவைகள் அலைந்த போதிலும் இழப்பீடு கிடைக்கவில்லை. எறிகணைத் தாக்குதலில் கண்ணில் காயமடைந்த காலம் தொடக்கம் அடிக்கடி வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டு வந்துள்ளார் என உறவினர்கள் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் மாலை சந்தைக்குப் புறப்பட்டுச் சென்ற அவர் வழியில் வலிப்பு ஏற்பட்டு மயங்கி வீழ்ந்தார் எனவும், அங்கிருந்து மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோது சாவடைந்துள்ளார் எனவும் தெரிவிக்கப் பட்டது என்று உறவினர்கள் குறிப்பிட்டனர். (ஐ)

## இலங்கையை மிரட்டுகிறது படைப்புழு!

### விவசாயத் திணைக்கள அதிகாரிகளுக்கு விடுமுறை இரத்து

கொழும்பு, ஜன.20

படைப்புழுவின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட வுள்ளமையால், விவசாயத் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கான விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு விடுமுறை இரத்து செய்யப்பட்டுள்ளது என விவசாயப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி டபிள்யூ.எம்.டபிள்யூ. வீரக்கோன் தெரிவித்தார்.

சுமார் 100 வகையான பயிர்செய்கையை படைப்புழு தாக்கக்கூடும்.

நாட்டின் சில பகுதிகளில் சோளம் உள்ளிட்ட சில துணைப் பயிர்ச்செய்கையைப் படைப்புழுக்கள் அதிகளவில் தாக்கியுள்ளன.



சுமார் 45,000 ஹெக்ரேயர் அளவான சோளச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் சோளம் சார் உணவுப் பொருட்களின் உற்பத்தி வீழ்ச்சியடைக்கூடும். என்றும் அவர் கூறினார். (ஐ)

## உலகின் மிகப் பழமையான கராம்பு, மிளகு மாந்தை அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜன. 20

மன்னார் – மாந்தையில் அகழ்வு ஆராய்ச்சியின்போது, கண்டுபிடிக்கப்பட்ட கராம்பு, உலகின் மிகப் பழமையான கராம்பு (லவங்கம்) என்று தொல்பொருள் ஆய்வாளர்கள் நம்புகிறார்கள் என அனைத்துலக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


அதேவேளை, பழமையான மாந்தைத் துறைமுகத்தில் மிகப்பெறுமதி வாய்ந்த கருப்பு மிளகுகள் தொடர்பான சான்றுகளையும் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், 2009/2010 காலப்பகுதியில், பன்னாட்டு ஆய்வாளர்கள் குழுவொன்று மாந்தை துறைமுகப் பகுதியில் அகழ்வாய்வில் ஈடுபட்டது.

இலங்கைத் தொல்பொருள் திணைக்களம், சீலிங்ஸ், மற்றும் லண்டன் பல்கலைக்கழக கல்லூரியின் தொல்பொருள் நிறுவகம் ஆகியன இணைந்து இந்த ஆய்வில் ஈடுபட்டிருந்தன.

இதன்போது, கண்டுபிடிக்கப்பட்ட கிராம்பு, கி.பி 900 ஆம் ஆண்டுக்கும் 1100 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தது என்று கண்டறியப்பட்டுள்ளதாக, ஆய்வாளர் எலினோர் கிங்வெல் பன்ஹம் தெரிவித்துள்ளார்.

இது ஆசியாவின் மிகப் பழைய கராம்பு மாத்திரமல்ல, உலகிலேயே மிகப் பழமையான கராம்பு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.




அதேவேளை, இங்கு கண்டுபிடிக்கப்பட்ட எட்டு மிளகுகள், கி.பி 600 தொடக்கம் 700 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்டதாக இருக்க லாம் என்றும் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இது தொடர்பான ஆய்வு முடிவுகளை அவர்கள் அண்மையில் வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை, அண்மையில் சீனா தொல்பொருள் ஆய்வாளர்களும் மாந்தை துறைமுகத்தில் அகழ்வாய்வுகளில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நல்லாட்சி அரசின் படுதோல்விக்கு மைத்திரியும், ரணிலுமே பொறுப்பு

### அமைச்சர் அர்ஜுன பரபரப்புக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 20

2015 ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் எமது ஆட்சியின் போது மக்கள் பெரிதாக எதனையும் அரசிடமிருந்து எதிர் பார்க்கவில்லை. ஜனநாயகம் நிலை நிறுத்தப்படவேண்டும்.



ஊழல்வாதிகள் கைது செய்யப்பட வேண்டும் என்பதே அவர்களின் பொதுவான கோரிக்கையாகக் காணப்பட்டது. எனினும், எமது அரசால் அதனைச் செய்ய முடியாமல் போனது. இதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுமே பொறுப்பு கூற வேண்டும் என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை கடந்த நான்கு ஆண்டுகளில் ஊழல் நடைபெற்றிருப்பதாக ஜனாதிபதி கருதினால் அது தொடர்பிலான நடவடிக்கைகளுக்கு நாமும் ஆதரவளிக்க தயாராகவுள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## இலங்கைக் கிரிக்கெட் அணியில் வீரர்களை இணைக்க இலஞ்சம்!

### விளையாட்டுத்துறை அமைச்சர் அதிர்ச்சி

இலங்கை கிரிக்கெட் அணியில் வீரர்களை இணைத்துக் கொள்வதற்கு, பலர் தனக்கு இலஞ்சம் வழங்க முன்வந்ததாக விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதேவேளை, தனக்கு இலஞ்சம் வழங்க முன்வந்த சந்தர்ப்பம் தொடர்பில் தான் சர்வதேச கிரிக்கெட் சபையின் ஊழலுக்கு எதிரான பிரிவின் தலைவர் அலெக்ஸ் மார்லிடம் கடந்த புதன்கிழமை முறைப்பாடு செய்தார் எனவும் அமைச்சர் கூறினார்.

இச்சம்பவம் தொடர்பில் சர்வதேச கிரிக்கெட் சபையின் ஊழலுக்கு எதிரான பிரிவின் தலைவர் அலெக்ஸ் மார்லிடம் முறையிட்டபோது அவர் பெரும் அதிர்ச்சிக்குள்ளானார். நானும் இதே அதிர்ச்சிக்குத்தான் உள்ளாகினேன். ஒரு நிமிடம் என்னை யாரோ ஆபத்தில் மாட்டிவிடப் பார்ப்பதாகவே நானும் எண்ணினேன். இதுபோன்ற சம்பவங்கள் இதற்கு முன்னர் எமது வரலாற்றில் இடம்பெற்றதேயில்லை, என்றும் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## நீங்களுமா... புரூட்டஸ்...?

சம்பந்தன் ஐயாவும் சுமந்திரனும் பெரும் நம்பிக்கை வைத்து, முழு ஈடுபாட்டுடன், அதிக விட்டுக் கொடுப்புகளைச் செய்து, நேர்மைத் திறத்துடன் முன்னெடுத்த புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் பெரும்பாலும் பின்னடைவைக் கண்டுவிட்டன என்பது உறுதியாகிவிட்டது.

இந்த நாட்டை ஏழு தசாப்தங்களாக உலுக்கி வரும் தேசிய இனப் பிரச்சினைக்கு பரஸ்பரம் நம்பிக்கையும் புரிந்துணர்வும் நல்லிணக்கமும் மிக்க நின்று, நிலைத்து, நீடிக்கும் தீர்வு ஒன்றையும் உள்ளடக்கியதாக புதிய அரசமைப்பை ஏற்படுத்துவதற்கு சம்பந்தன் – சுமந்திரன் இணை மேற்கொண்ட பகீரதப் பிரயத்தன முயற்சி கடைசியில் விழலுக்கு இறைத்த நீராகும் சூழல் ஏற்பட்டுள்ளது.

சர்வதேசமோ அல்லது ஐ.நா. மன்றமோ அல்லது அதன் முகவர் அமைப்புக்களோ தமிழர் தரப்பு மீது ஒருவிரலைத் தன்னும் நீட்டிக் குற்றம் சொல்லமுடியாத வகையில் இந்தத் தீர்வு முயற்சியில் தமிழர் பிரதிநிதிகள் முழு முனைப்புடனும், இதய சுத்தியுடனும், நியாயத்துக்குப் பிசகாமலும், உண்மைத் தன்மையுடனும் பங்கு பற்றினார்கள்; ஈடுபட்டார்கள்; கலந்து கொண்டார்கள்.

இந்த இலங்கைத் தீவிலே சட்டத்தின் ஆட்சி – ஜனநாயத்தின் அதிகாரம் நிலை நிறுத்தப்படுவதற்காகத் தமிழர் தரப்பு ஆற்றிய பணியும், அமைதித் தீர்வு முயற்சிகளை எட்டுவதற்குக் கடந்த எட்டு ஆண்டுகளுக்கு மேல் அவர்கள் விட்டுக் கொடுத்து வழங்கிய ஒத்துழைப்பும் என்றும் சிலாகிக்கத் தக்கவை.

தமிழ்த் தேசிய இனத்தின் ஆன்மாவிலேயே நீங்காத வடுவாக படுகாயத்தை ஏற்படுத்திய கொடூர யுத்தக் குற்றங்களைப் புரிந்த கொழும்பு ஆட்சிப் பீடத்துடன் சமரசம் செய்வதன் மூலம் நின்று, நிலைக்கும் நியாயத் தீர்வு ஒன்றைப் பெறலாம் என்று முழுமூச்சில் முயன்ற சம்பந்தனும் சுமந்திரனும் அதற்காக எதிர்கொண்ட சிக்கல்கள், சுமந்த பாடுகள் ஏராளம். ஏராளம். தமிழர் தரப்பிலேயே அவர்கள் முகம் கொடுத்த நெருக்கடிகள், எதிர்ப்புகள் அளவிட முடியாதவை.

அரசியல் துணிச்சலோடு அவர்கள் எடுத்த முயற்சிகள் புறக் குடத்தில் ஊற்றிய நீராகியுள்ளமை துரதிஷ்டவசமானது.

தெற்கில் மீண்டும் விஸ்வரூபம் எடுத்து வரும் பேரினவாத சக்திகள் இந்தத் தீர்வு முயற்சிக்கு எதிராகக் கிளர்ந்துள்ளமை எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே. அதனைக் கருத்தில் வைத்தபடியேதான் காய்களை நகர்த்தினார்கள் சம்பந்தனும் சுமந்திரனும். அந்தப் பேரெழுச்சிக்கு என்றோ ஒரு நாள் முகம் கொடுத்தாக வேண்டும் என்ற அரசியல் துணிச்சலோடுதான் இந்த 'றிஸ்க்'கான விவகாரத்தில் களமிறங்கினார்கள் அவர்கள். 2014 கடைசியில் இதற்கான எத்தனத்தை திரைமறைவிலேயே அவர்கள் ஆரம்பித்த சமயத்திலேயே, ஏதோ ஒரு கட்டத்தில் தென்னிலங்கைப் பேரினவாதத்தை – சிங்கள, பௌத்த தீவிரவாதிகளின் கிளர்ச்சியை – தாங்கள் எதிர்கொண்டாக வேண்டிவரும் என்பதை அவர்கள் முற்கூட்டியே எதிர்பார்த்திருந்தனர்.

எனினும், அதற்கு இடையில் தென்னிலங்கையில் தாம் கட்டிவளர்க்கப்போகின்ற நல்லெண்ணமும், பரஸ்பர நம்பிக்கையும், புரிந்துணர்வும், நல்லிணக்கமும் தெற்கில் கிளர்ந்தெழக் கூடிய பேரினவாத எழுச்சியைத் தமிழரும், சிங்களவர்களும், முஸ்லிம்களும் என இத்தீவின் மூன்று பெரிய இனத்தவர்களும் சேர்ந்து எதிர்கொண்டு முறியடிக்கப் போதுமானதாக இருக்கும் என அவர்கள் நம்பினர்; எதிர்பார்த்தனர்.

அங்குதான் அவர்களுக்குப் பெரும் அரசியல் சறுக்கல் ஏற்பட்டிருக்கின்றது.

தமிழர் தரப்பில் இந்த சமாதான முயற்சியைத் தனித்து தீவிரமாக முன்னெடுத்த சம்பந்தனுக்கும் சுமந்திரனுக்கும் இந்தப் பெரும் அரசியல் சறுக்கலை ஏற்படுத்தியவர்கள் அவர்கள் இவ்விடயத்தில் தங்களுக்கு எதிரானவர்கள் என்று கருதியவர்கள் அல்லர். இவ் விவகாரத்தில் தங்களுக்கு உதவுவார்கள் என நம்பியிருந்த அரசியல் சகாக்கள்தாம் அவர்களின் காலை வாரி அரசியல் சறுக்கலை உறுதிப்படுத்தியிருக்கின்றார்கள்.

இந்த வரிசையில் முதலாமவர் மைத்திரிபால சிறிசேன. எவ்வளவு பேராபத்துக்கு மத்தியில், எத்தனையோ எதிர்பார்ப்புகளோடு சம்பந்தன் – சுமந்திரன் வழிகாட்டலில் தமிழரும் சேர்ந்து அவரை ஜனாதிபதியாக்கியதன் பெறுபேறு என்னவென்பதை இங்கு விவரிக்கத் தேவையில்லை. வாசகர்களுக்கு நன்கு தெரிந்த விடயங்கள் அவை.

அடுத்தவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது ஐ.தே.கவினரும்.

தெற்கில் கிளர்ந்தெழும் சிங்கள, பௌத்த பேரினவாதத்துக்கு அஞ்சி, வெறும் வாக்கு வங்கிச் சிந்தனையில் இந்த அமைதி முயற்சிகளில் இருந்து நாசூக்காக ஜாகா வாங்குகின்றனர் ரணிலும் அவர் கட்சியினரும்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது புதிய அரசமைப்புக்கான வரைவே அல்ல, வெறும் அறிக்கை மட்டும்தான் என்று கூறி, இந்தக் கூட்டு முயற்சிப் பொறுப்பிலிருந்து பின்வாங்குகின்றனர் ஐ.தே.கவினர்.

அந்த அறிக்கையில் என்ன கூறப்பட்டிருந்தாலும், தற்போதைய அரசமைப்பில் ஒற்றையாட்சி பற்றிய இரண்டாவது ஷரத்தை அப்படியே பேணிப் பாதுகாப்போம் என்று பிரகடனப்படுத்தியமை மூலம், இதுவரை காலமும் தாமும் சேர்ந்து பேசி வந்த *'ஏக்கிய இராஜ்ஜிய /ஒருமித்த நாடு'* என்ற கோட்பாட்டையே தூக்கிக் கடாசி விட்டார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

கண்டியில் பௌத்த மத பீடங்களைப் போய்ச் சந்தித்து, அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல உட்பட்ட ஐ.தே.க. அமைச்சர்கள் தெரிவித்திருக்கும் கருத்துக்களை உள்ளார்ந்தமாக நோக்கினால், தற்போதைய அமைதி முயற்சிகளுக்கு வில்லன்கள், வெளியில் இல்லை, சம்பந்தன் – சுமந்திரன் எவரெவரை நம்பி இந்த முயற்சிகளை ஆரம்பித்தனரோ அவர்களுக்குள்தான் உள்ளனர் என்பது புரியும்.

இன்றைய நிலையில், இப்படித் தமது அரசியல் நம்பிக்கையில் மண்ணை வாரி இறைத்து முதுகில் குத்திய இத்தரப்பினரைப் பார்த்து 'நீங்களுமா புரூட்டஸ்?' என்று கேள்வி கேட்பதைத் தவிர சம்பந்தன் – சுமந்திரன் இணைக்கு இன்று வேறு மார்க்கம் இல்லை.

# வடமாகாண நிலையான மீன்பிடிகொள்கைக்கான முன்மொழிவுகள் வெளியீட்டுவைக்கப்பட்டுள்ளது.

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஜன.20




வடமாகாண நிலையான மீன்பிடிகொள்கைக்கானமுன்மொழிவுகள் வெளியீடும் மாகாண கடற்றொழிலாளர் அபிவிருத்திக்கான இணை முகாமைத்துவ கலந்துரையாடலும் வடமாகாண மீனவர் இணைய தலைவர் ஜனாப்என் எம்ஆலம்தலைமையில்யாழ்ப்பாணம்ரில்கோவிருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் பிரதமஅதிதிகளாக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க தலைவர் கேமன் குமார, யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி சூசைதாசன், விரிவுரையாளர்செ.ரவீந்திரன் ஆகியோரும்கலந்துகொண்டதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களின் மீன்பிடி நீரியல்வளதிணைக்களஅதிகாரிகள் கடற்படைஅதிகாரிகள், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன், தமிழர் சுயாட்சி கழக பொதுச் செயலரும் மாகாண முன்னாள் அமைச்சருமானஅனந்தி சசிதரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வட மாகாண மீன்பிடி இணையத் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க தலைவர் மற்றும் பிரதிநிதிகள் ஆகியோர் முன்மொழிவுகளை வெளியிட்டு வைக்க யாழ் பல்கலைக் கழக பேராசிரியர் கலாநிதி சூசைதாசன், விரிவுரையாளர் செ.ரவீந்திரன் யாழ், கிளிநொச்சி,முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்ட மீன்பிடி நீரியல் வளத் திணைக்களஅதிகாரிகள் கடற்படைஅதிகாரிகள் ஆகியோர் அதனை பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை இங்குஉரையாற்றிய அனைவரும் மீனவர்களையும் மீன்பிடியையும் பாதுகாக்கின்ற சட்டங்கள் கடந்த வருடம் கொண்டு வரப்பட்டும் குறிப்பாக 2017 ம் ஆண்டின் 11 ம் இலக்க இழுவை மடி தடைச்சட்டம் மற்றும் வெளிநாட்டு படகுகளுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தும் 2018ஆம் ஆண்டின் முதலாம் இலக்கச் சட்டம்ஆகியவற்றைநடைமுறைப் படுத் தும்படி அரசு மற்றும் அரச அதிகாரிகள் துறைசார் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தனர்.

அதேவேளை வடமாகாணத்தில் திட்டமிட்ட கரையோர குடியேற்றங்களை நிறுத்துமாறும் தேசிய பூங்கா எனும் பெயரில் மீனவர்களின் வாழ்விடங்கள் மற்றும் கரையோரத்தில் மீனவர் கரைவலைப்பாடுகள் உட்பட. பல ஏக்கர் மீனவர் காணிகள் கடற்படையால்அபகரிக்கப்பட்டுள்ளன என்றும் அவற்றையும் உடனடியாக விடுவிக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

# கிளிநொச்சி மாவட்டத்துக்கும் கிடைத்தன அம்புலன்ஸ்கள்




கிளிநொச்சி,ஜன.20

மத்திய சுகாதார அமைச்சினால் ஒரு தொகுதி அதிநவீன நோயாளர் காவுவண்டிகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நாட்டிலுள்ள வைத்தியசாலைகளுக்குவழங்கப்பட்டன.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்றுமுன்தினம் பிற்பகல் கொழும்பு மாநகரசபை மைதானத்தில் இடம் பெற்ற வைபவரீதியிலான கையளிப்பு நிகழ்வின்போது 132 நோயாளர் காவுவண்டிகளையும் அந்தந்த வைத்தியசாலைகளுக்குக் கையளித்தார்.

மொத்தம் 250 கோடி ரூபா பெறுமதியான பிரித்தானியாவில் தயாரிக்கப்பட்ட போட் ரக அதிநவீன நோயாளர் காவு வண்டிகளில் 103 வண்டிகள் மாகாண சுகாதார அமைச்சுகளின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளுக்கும், 27 மத்திய சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளுக்கும் 02 ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வடமாகாணத்தில் சில வைத்தியசாலைகளில் நோயாளர் காவுவண்டிகளே இல்லாத நிலையும், மேலும் சிலவற்றில் மிகப் பழைய நோயாளர் காவுவண்டிகள் நீண்டகாலமாக சேவையில் உள்ள அவலமும் நிகழ்ந்து வருகிறது.

இந்நிலையில் வடமாகாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட சில வைத்தியசாலைகளுக்கும் இந்த அதிநவீன நோயாளர் காவுவண்டிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் வரும் வைத்தியசாலைகளுக்கென 03 வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது.

அதேவேளை கிளிநொச்சியில் வேரவில் போன்ற போக்குவரத்துச் சிரமங்கள் மிகுந்த இடங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு அந்தப் பகுதிகளுக்கு ஏற்றவகையிலான நோயாளர்காவுவண்டிகள் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையானது முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தினால்அண்மையில் கிளிநொச்சிக்கு வருகை தந்த மத்திய சுகாதார அமைச்சருக்கு முன்வைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## பொங்கல் விழா

அளவெட்டி,ஜன. 20

யாழ். மாவட்ட கலாசார அதிகார சபையினரால் இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு, தெல்லிப்பழை கலாசார மத்திய நிலையத்தில் (அளவெட்டி) பொங்கல் விழா யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(இ – 19)

## மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிக்கான மரதன், சைக்கிள் ஓட்டப்போட்டிகள் இன்று ஞாயிற்று காலை 5.45 மணிக்கு கல்லூரி முன்பாகஆரம்பமாகவுள்ளன.

பழைய மாணவர்கள் அனைவரும்கலந்துகொள்ளுமாறு செயலாளர் எம்.ஜெகதீசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

(இ – 19)

## நாளை

21.01.2019
திங்கட்கிழமை

நட்சத்திரம் : பூசம் பி.இ 4.32 வரை
திதி : பூரணை மு.ப 11.45 வரை
சுபநேரம் : 12.35 - 2.05 வரை
இராகுகாலம் : 8.05 - 9.35 வரை

# வவு. நகரசபையின் 10 ஆவது அமர்வில் பல்வேறு பிரச்சினை குறித்து ஆராய்வு

வவுனியா,ஜன.20

வவுனியா நகரசபையின் பத்தாவது அமர்வு நகரசபை தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நேற்று முன்தினம் (18) நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

காலை 9.30 மணிமுதல் மதியம் 12.30. மணிவரை நகரசபை உறுப்பினர்களால் பல்வேறு பிரச்சினைகள் முன் வைக்கப்பட்டு விவாதங்கள் நடைபெற்றன.

முக்கியமாக நகரப்பகுதிகளில் தேங்கியிருக்கும் கழிவுகளை அகற்றுவதில் நகரசபையின் அசமந்தப் போக்கு,சுகாதாரத் தொழிலாளர்களின் பற்றாக்குறை தொடர்பில் விவாதிக்கப்பட்டதுடன் அண்மையில் வவுனியா நகரத்தின் புதிய பஸ் நிலையத்துக்கு முன்பாக மதுபானசாலை அமைக்க அனுமதி வழங்கப்பட்டது தொடர்பாகவும் அதற்கு எவ்வாறு நகரசபை அனுமதி வழங்கியது எனவும் நகரசபை உறுப்பினர்களால் தவிசாளரிடம் கேள்வி எழுப்பினார்.



அதற்கு பதிலளித்த நகரசபை தவிசாளர் இ.கௌதமன் மதுபான சாலைக்கு அனுமதி அளித்தது மது வரித்திணைக்களம் என பதிலளித்திருந்தார்.

அத்துடன் மதுபானசாலை அமைப்பதற்கு வியாபார நிலையத்தை வழங்கிய கட்டட உரிமையாளர் அருகில் மாணவர்களின் மேலதிக வகுப்புக்கு கட்டடத்தை வாடகைக்கு வழங்கியுள்ளார் என வும் சுட்டிக்காட்டினார்.

நடிகரும் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சருமான எம்.ஜி.ஆருக்கு வவுனியா நகரத்தின் மையப்பகுதியில் சிலை அமைப்பது தொடர்பாக நகரசபை உறுப்பினர் ரி.கே.ராஜலிங்கத்தால் முன்மொழிவு ஒன்று வாக்கெடுப்புக்காக சபையில் முன்வைக்கப்பட் டது.

இந்த முன்மொழிவானது நகரசபை தவிசாளரினால் சபையின் முடிவுக்கு விடப்பட்ட நிலையில் 21 உறுப்பினர்களை கொண்ட சபையில் 18 உறுப்பினர்கள் ஆதரவாகவும் பாஸ்கரன் ஜெயவதனி மற்றும் சமந்தா செபநேசராணி ஆகிய இருவர் எதிராகவும் ஒருவர் சமுகமளிக்காத நிலையில் தீர்மானம் பெரும்பான்மை பெற்றதன் காரணமாக எம்.ஜி. ஆருக்கு சிலை அமைக்க அனுமதிவழங்குவது என தீர்மானம் எடுக்கப்பட்டது.

## மாணவியை தாக்கிய அதிபரை கைது செய்தனர் பொலிஸார்

வவுனியா,ஜன.20

வவுனியா, ஓமந்தை நொச்சிக்குளத்தில் அமைந்துள்ள பிரபல பாடசாலையில் மாணவியை தாக்கிய அதிபரை ஓமந்தை பொலிஸார் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) மதியம் கைது செய்துள்ளனர்.

ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நொச்சிக்குளம் பகுதியில் அமைந்துள்ள பாடசாலையொன்றின் மாணவி மீது பாடசாலை அதிபர் மேற்கொண்ட தாக்குதலில் மாணவி படுகாயமடைந் தார்.

இந்நிலையில், காயமடைந்த மாணவி ஓமந்தை பொலிஸாரின் உதவியுடன் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனையின் பின்னர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையிலேயே நேற்றுமுன்தினம் குறித்த மாணவி மீது தாக்குதல் மேற்கொண்ட பாடசாலை அதிபரை ஓமந்தை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

## கிளி.கரைச்சி பிரதேச சபையின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பம்

கிளிநொச்சி,ஜன.20

கரைச்சி பிரதேச சபையின் 2019 ஆண்டின் பாதீட்டில் அடையாளப்படுத்தப்பட்ட அபிவிருத்தி பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

21 வட்டாரங்களை உள்ளடக்கிய கரைச்சி பிரதேச சபை முதற்கட்டமாக வட்டாரத்துக்கு ஒரு பெட்டிக்கல் வெட்டு வீதம் 21 பெட்டிப்பாலங்களுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (18.01.2019) நடைபெற்றது.

அக்கராயன்,உதயநகர்,கிருஷ்ணபுரம், செல்வாநகர், திருநகர் உருத்திரபுரம், ஆகிய இடங்களில் இந் நிகழ்வுகள் நடைபெற்றன. ஒவ்வொன்றும் 0.6 மில்லியனுக்கு குறையாத வகையில் மொத்தமாக 03 மில்லியன் ரூபாய்களில் 49 பெட்டிப்பாலங்கள் அமைப்பதற்கான நிதி பாதீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



இதன் ஆரம்ப நிகழ்வுகளில் தவிசாளர் அ.வேழமாலிகிதன், உப தவிசாளர், வட்டார உறுப்பினர்கள் கிராமிய பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## தனியார் பஸ் சாரதி தாக்குதலில் காயமடைந்த இ.போ.ச நடத்துனர்

வவுனியா,ஜன.20

வவுனியா எட்டாம் கட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மதியம் 1.30 மணியளவில் இ.போ.ச. நடத்துனர் மீது தனியார் பஸ் சாரதி மற்றும் நடத்துநர்கள் சேர்ந்து தாக்குதல் மேற்கொண்டதில் காயமடைந்த இ.போ.ச. ஊழியர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவிலிருந்து பூவரசங்குளம் ஊடாக செட்டிகுளம் நோக்கி பயணித்த இ.போ.ச. பஸ்ஸை எட்டாம் கட்டைப் பகுதியில் வவுனியாவிலிருந்து வாரிக்குட்டியூர் நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸினர் வழிமறித்து தமது நேரத்தில் நீங்கள் செல்கிறீர்கள் எனத் தெரிவித்தமையை அடுத்து தெரிவித்து ஏற்பட்ட கருத்து முரண்பாட்டின் போது இ.போ.ச. நடத்துநர் மீது தாக்குதல் மேற் கொண்டதில் 31 வயதுடைய பஸ் நடத்துநர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பூவரசங்குளம் பொலிஸார் குறித்த தனியார் பஸ்ஸின் நடத்துனர், சாரதி இருவரையும் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளனர் எனத் தெரிவித்தனர்.

## நாட்டில் கடந்த 16 நாள்களில் 499 டெங்கு நோயாளிகள்



கொழும்பு,ஜன.20

கடந்த 16 நாள்களில் நாட்டின் பல பாகங்களில் இருந்து இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட டெங்கு நோயாளர் கள் அடையாளங் காணப்பட்டுள்ள னர்.

அதன்படி கொழும்பு மாவட்டத்தில் ஆகக்கூடுதலாக 625 நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளதுடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் 499 நோயாளிகளும் கம்பஹா மாவட்டத்தில் 180 நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதாக தொற்றுநோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கண்டி மாத்தறை களுத்துறை ஆகிய மாவட்டங்களிலும் டெங்கு நோயாளிகள் கூடுதலாக இனங்காணப்பட்டுள்ளதாக தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் சமூக சுகாதார சிறப்பு நிபுணர் டொக்டர் பிரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

# பாலத்தை புனரமைத்து தரக்கோரி மக்கள் வீதியை மறித்து போராட்டம்

லிந்துலை,ஜன.20

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை நுவரெலியா பிரதான வீதியை இணைக்கும் பெயார்வெல் தோட்டப்பாதையில் அமைந்துள்ள பிரதான பாலத்தைப் புனரமைத்துத் தருமாறு கோரி சுமார் 500க்கும் மேற்பட்ட தோட்ட மக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பாலத்தினூடாக நாளாந்தம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பயணம் செய்வதுடன் நூற்றுக்கணக்கான வாகனங்கள் இந்த பாலத்தைப் பயன்படுத்தியே



பயணம் செய்கின்றன. ஆனால் பாலம் இரண்டு வருட காலமாக உடைந்து உயி ராபத்துக்கள் ஏற்படக்கூடிய நிலையில் காணப்படுவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இந்த பாலத்தினூடாக சுமார் நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு செல்லும் போது ஒதுங்குவதற்கு வழியின்றி பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அத்தோடு உரிய நேரத்துக்கு பாடசாலைகளுக்கு செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதாகவும் நாளாந்தம் வேலைக்கு செல்பவர்களும் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் பாலத்தினூடாக செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இப்குதியில் வசிப்பவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பாலத்தைப் புனரமைத்துத் தருமாறு அரசியல் வாதிகளிடமும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடமும் தெரிவித்துள்ள போதிலும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என இவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே ஆபத்தான நிலையில் உள்ள இந்த பாலத்தினை உயிராபத்து ஏற்படுவதற்கு முன் பொறுப்பு வாய்ந்தவர்கள் புனரமைத்து தரவேண்டும் என இவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# இடி, மின்னலை முன்கூட்டியே கண்டறிய உருவாக்கப்படும் புதிய தொழில்நுட்பம்



புதுடில்லி,ஜன.20

இடி, மின்னல் தாக்குதல் குறித்த எச்சரிக்கையை முன்கூட்டியே வெளியிடுவதற்கான புதிய தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டுவருவதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில், இயற்கை பேரிடரால் ஏற்படும் அழிவு குறித்தும், அதை எதிர்கொள்வது குறித்தும் சர்வதேச மாநாடு 3 நாள்கள் நடைபெறுகிறது. இந்த மாநாட்டின் தொடக்க விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் இந்திய வானிலை ஆய்வு மையத்தின் பொது இயக்குநர் கே.ஜே. ரமேஷ் கலந்துகொண்டு பேசுகையில்,

இடி, மின்னல் ஆகியவற்றால் ஏற்படும் உயிரிழப்புகள், நாட்டில் இயற்கை பேரிடரால் ஏற்படும் உயிரிழப்புகளில் 2ஆவது இடம் வகிக்கிறது. இடி, மின்னலை முன்கூட்டியே கணிப்பது விரைவில் சாத்தியமாகும். ராடர் மற்றும் செயற்கைகோள்கள் அனுப்பும் புகைப்படங்களைக் கொண்டு, இடி, மின்னல் போன்றவற்றை முன்கூ டியே கண்டறிவதற்கான முயற்சி நடைபெற்று வருகிறது.

அதன்மூலம் மக்களுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தொலைபேசி மூலமாகவே, குறுஞ்செய்தி மூலமாகவோ தகவல்கள் தெரிவிக்கப்படும். அதற்கான தொழில்நுட்பத்தை மத்திய அரசு தற்போது உருவாக்கி வருகிறது. இந்த தொழில் நுட்பம் வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

# நாடாளுமன்றத் தேர்தல் மார்ச்சில் திகதி அறிவிப்பு?




நாடாளுமன்றத் தேர்தலுக்கான திகதியை, வரும் மார்ச் மாதத்தில் வெளியிட தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய நாடாளுமன்றின் பதவிக் காலம் ஜூன் 3ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. இதனை முன்னிட்டு, புதிய நாடாளுமன்றுக்கு பொதுத் தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது.

தேர்தலை எத்தனை கட்டங்களாக நடத்துவது உள்ளிட்ட விடயங்கள் குறித்து தேர்தல் ஆணையம் ஆலோசனை நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பான முடிவுகள் எடுக்கப்பட்ட பிறகு, 2019ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்றத் தேர்தல் திகதி வரும் மார்ச் மாதம் முதல் வாரத்தில் அறிவிக்கப்படும் என தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில்,நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக பிஹார் தலைநகர் பாட்னாவில் தலைமைத் தேர்தல் ஆணையர் சுனில் அரோரா உள்ளிட்டோர் ஆலோசனை நடத்தினர்

# மம்தா பானர்ஜி தலைமையில் எதிர்க்கட்சிகள் அணிதிரள்வு



கொல்கத்தாவில் மாபெரும் பொதுக்கூட்டம்

கொல்கத்தா,ஜன.20

கொல்கத்தாவில் நேற்றையதினம் மம்தா பானர்ஜி தலைமையில் பிரமாண்ட பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில், நாடு முழுவதிலும் இருந்து எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவை வீழ்த்த எதிர்க்கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன.

பா. ஜனதாவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளை ஒன்று திரட்டும் முயற்சியில் மேற்கு வங்க முதலமைச்சரும், திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி களத்தில் தீவிரமாக இறங்கியுள்ளார். மேற்கு வங்க மாநில தலைநகர் கொல்கத்தாவில் பா.ஜனதாவை எதிர்க்கும் கட்சித் தலைவர்களின் பிரமாண்ட பொதுக்கூட்டம் நடைபெறும் என்று அறிவித்தார். இதற்காக நாடு முழுவதும் இருந்து 25இற்கும் மேற்பட்ட கட்சிகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார். இதனை ஏற்று பல்வேறு தலைவர்கள் கொல்கத்தா வந்துள்ளனர்.

அதன்படி, கொல்கத்தாவில் உள்ள பிரிகேட் பரேட் மைதானத்தில் நேற்று மதியம் பிரமாண்ட பொதுக்கூட்டம் நடைபெற்றது. மம்தா தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சரத் பவார், தேவேகவுடா, மல்லிகார்ஜுன கார்கே, சந்திரபாபு நாயுடு, குமாரசாமி, அரவிந்த் கெஜ்ரிவால், பரூக் அப்துல்லா, உமர் அப்துல்லா, மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

பா.ஜனதா அதிருப்தி தலைவர்கள் யஷ்வந்த் சின்கா, சத்ருகன் சின்கா, அருண்ஷோரி, ராம்ஜெத் மலானி ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

# சபரிமலைக்கு 51 பெண்கள் சென்றார்களா? கேரள அரசின் பிரமாண பத்திரத்தால் சர்ச்சை

சபரிமலை கோவிலுக்கு இதுவரை 51 பெண்கள் சென்றிருக்கின்றனர் என உயர்நீதிமன்றில் கேரள அரசு சார்பில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்தி யுள்ளது.

உயர்நீதிமன்றில் கேரள அரசு சார்பில் ஆஜரான சட்டத்தரணி, சபரிமலை கோவிலுக்கு இதுவரை 51 பெண்கள் சென்றனர் எனக் கூறி, ஒரு பிரமாண பத்திரத்தையும் தாக்கல் செய்தார். கேரள அரசு இப்போது தான் முதல் முறையாக 10 – 50 வயதுக்கு இடைப்பட்ட பெண்கள் 51பேர் சபரிமலை கோவிலுக்கு சென்றனர் எனத் தெரிவித்துள்ளது. இது கேரளாவில் மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

உயர்நீதிமன்றில் கேரள அரசு தாக்கல் செய்த பிரமாண பத்திரத்துக்கு பா.ஜனதா, காங்கிரஸ், சபரிமலை கர்மா சமிதி, பந்தளம் அரண்மனை குடும்பம் ஆகியவை கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. பா.ஜனதா மாநில தலைவர் ஸ்ரீதரன் பிள்ளை, இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய பொய் இது. உயர்நீதிமன்றில் பொய் தகவலை கூறியமையுடன், மக்களை முட்டா ளாக்க நினைக்கிறார்கள் என்றார்.

காங்கிரஸ் மாநில தலைவர் முல்லப்பள்ளி ராமச்சந்திரன் கூறும்போது, தவறான பிரமாண பத்திரம் தாக்கல் செய்தது மாநிலத்துக்கு ஏற்பட்ட அவமானம். இதற்கு முதலமைச்சரே பொறுப்பேற்க வேண்டும் – என்றார்

## தமிழகத்தில் இந்தவருடமும் பரவுகிறது பன்றிக் காய்ச்சல்



சென்னை,ஜன.20

தமிழகத்தில் கடந்த ஆண்டைப் போல் இந்த ஆண்டின் தொடக்கத்தில் பன்றிக்காய்ச்சல் பரவத் தொடங்கி உள்ளது. கடந்த 13 நாள்களில் பன்றிக் காய்ச்சலால் 48 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டின் தொடக்கத்திலேயே பன்றிக் காய்ச்சல் வேகமாக பரவத் தொடங்கியுள்ளது. கடந்த 1ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை தமிழகத்தில் 48 பேர் பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

கடந்த 13 நாள்களில் நாட்டிலேயே அதிகபட்சமாக ராஜஸ்தானில் 789 பேர் பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு அதில் 31 பேர் உயிரிழந்துள்ளனர். ராஜஸ்தானில் ஏற்பட்டுள்ள பன்றிக் காய்ச்சல் பாதிப்பு நாடுமுழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அடுத்தபடியாக குஜராத்தில்210 பேர், டெல்லியில் 168 பேர் ஹரியானாவில் 128 பேர் குஜராத்தில் 109 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நாடு முழுவதும் 13 நாள்களில் பன்றிக்காய்ச்சலால் 1,694 பேர் பாதிக்கப்பட்டு, 49பேர் உயிரிழந்துள்ளனர் என்று மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. பா.ஜ.க. தேசிய தலைவர் அமித்ஷாவும் பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியா - பாகிஸ்தான் நாடுகள் பிரச்சினைகளை பேசித்தீர்க்கவேண்டும்



இந்தியாவும் பாகிஸ்தானும் தமக்கிடையேயான பிரச்சினைகளை பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று ஐ.நா. தெரிவித்துள்ளது.

இந்தியாவும் பாகிஸ்தானும் தங்கள் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள அர்த்தமான முறையில் பேச்சில் ஈடுபடும் என நம்பிக்கை இருப்பதாக ஐ. நா. செயலர் அண்டோனியா கட்டர்ஸ் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் உள்ள ஐநா அலுவலகத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அண்டோனியோ கட்டர்ஸ் இந்தியாவும் பாகிஸ்தானும் அர்த்தமுள்ள வகையில் பேச்சில் ஈடுபடும் என்று எனக்கு நம்பிக்கை உள்ளது. இருநாடுகளும் பேச்சில் ஈடுபடுவதற்கு உதவ நான் தயாராக உள்ளேன் – என்றார்.

# அமெ. ஜனாதிபதி ட்ரம்ப் பதவி விலகினார் வொஷிங்டன் போஸ்ட் பதிப்பால் பரபரப்பு

வொஷிங்டன், ஜன. 20

டொனால்ட் டிரம்ப் ராஜினாமா உலகெங்கிலும் கொண்டாட்டம் என்ற வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகையின் போலி பதிப்பால் அமெரிக்காவில் பரபரப்பு ஏற்பட்டு உள்ளது.


The Washington Post

UNPRESIDENTED

TRUMP HASTILY DEPARTS WHITE HOUSE, ENDING CRISIS

Celebrations break out worldwide as Trump era ends

Entire globe breathes sigh of relief at end of dark period

"BLAME CROOKED HILLARY & IFIOR"

Surge of protests proves too much for Trump

அமெரிக்காவின் வொஷிங்டன் டிசியில் உள்ளமக்கள் புதன்கிழமை காலை ஒரு பெரிய ஆச்சரியத்தில் மூழ்கினர். வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகையின் முதல் பக்கத்தில் 6 கொலம் செய்தியாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பதவி விலகியுள்ளார், என்று இடம்பெற்று இருந்தது.

அதன் தலைப்பில் எதிர்பாராதது: டிரம்ப் வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறினார் நெருக்கடி முடிவுக்கு வந்தது என தனது தலைப்பில் தெரிவித்து இருந்தது. அதில் டிரம்பின் படம் அவரது தலை தொங்கி சோகத்தில் இருக்கின்றமை போல் இருந்தது.

பத்திரிகையின் இடது பக்கத்தில், நீண்ட ஒற்றை கொலத்தில் அறிக்கை இருந்தது. அதன் தலைப்பில் டிரம்ப் சகாப்தம் முடிவடைகிறது என உலகெங்கிலும் கொண்டாடப்படுகின்றது. செய்தித்தாள் மே 1, 2019 என திகதியிடப்பட்டு இருந்தது.

இதில் ஆச்சரியம் என்னவென்றால், வொஷிங்டன் டிசி இன் நாளிதழ் வெள்ளை மாளிகையின் அருகே உள்ள பகுதிகள் உட்பட இலவசமாக விநியோகிக்கப்பட்டது.

தி வொஷிங்டன் போஸ்ட் அது ஒரு போலி பதிப்பு என்று தெளிவுபடுத்தியதுடன் செய்தித்தாள் எதுவும் நாங்கள் வெளியிடவில்லை என கூறி உள்ளது.

வொஷிங்டன் போஸ்ட்டின் போலி பதிப்பின் படி, அந்த செய்தியானது லிசா சுங் என்பவரால் எழுதப்பட்டது. அதிபர் டொனால்ட் டிரம்ப் ஏப்ரல் 30, 2019 அன்று வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறினார் என்று அதில் கூறப்பட்டு இருந்தது.

# அதிகளவு குழந்தைகளை பெற்றெடுக்குமாறு நோர்வே பிரதமர் மக்களுக்கு அறிவிப்பு



ஒஸ்லோ, ஜன.20

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான நோர்வேயில் எர்னா சோல்பெர்க் என்ற பெண் பிரதமராக உள்ளார்.

அண்மையில் நாட்டு மக்களுக்கு எர்னா சோல்பெர்க் ஒரு செய்தி விடுத்தார். அந்தச் செய்தியில் அவர், "நமது நாட்டுக்கு இப்போதைய தேவை அதிக எண்ணிக்கையிலான குழந்தைகள்தான். இதை எப்படி செய்து முடிக்க வேண்டும் என்பதை நான் உங்களுக்கு சொல்லத் தேவையில்லை என்று கருதுகிறேன்" என கூறி உள்ளார்.

மேலும் "இனி வரும் காலத்தில், இதே போல் நாடு இருந்தால் (பிறப்பு வீதம் குறைவாக இருந்தால்) நாம் ஏராளமான பிரச்சினைகளை சந்திக்க நேரிடும்" எனவும் அவர் எச்சரித்தார்.

இது அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பொதுவாக நோர்டிக் நாடுகள் என்று அழைக்கப்படக்கூடிய நோர்வே, சுவீடன், டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து நாடுகளில் குழந்தைகள் பிறப்பு வீதம் குறைவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க – வடகொரிய தலைவர்கள் பெப்ரவரியில் சந்தித்துப் பேச்சு

## வெள்ளை மாளிகை அறிவிப்பு

பெப்ரவரி மாத இறுதியில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், வடகொரிய ஜனாதிபதி கிம் இடையேயான சந்திப்பு நடைபெறும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் 12ஆம் திகதி சிங்கப்பூரில் உச்சி மாநாடு நடத்தி இருநாட்டு தலைவர்களும் சந்தித்து பேசினர். உலக அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த பேச்சின் போது இரு நாட்டு தலைவர்களிடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. அதோடு, கொரிய தீபகற்ப பகுதியை அணு ஆயுதங்கள் அற்ற பகுதியாக ஆக்குவதற்கு ஏற்ற விதத்தில் வடகொரியா செயல்படும் என கிம் ஜாங் அன் உறுதிமொழி அளித்தார். அதன்படி தங்கள் நாட்டில் உள்ள அணு ஆயுத சோதனை கூடங்கள் மற்றும் ஏவுகணை தளங்களை வடகொரியா மூடியது.



எனினும் வடகொரியா மீது விதித்துள்ள கடுமையான பொருளாதார தடைகளை அமெரிக்கா விலக்கி கொள்ளாததால், எந்த நேரத்திலும் அணு ஆயுத கொள்கைக்கு திரும்பி விடுவோம் என வடகொரியா எச்சரித்து வருகிறது. புத்தாண்டையொட்டி வடகொரிய மக்களிடையே உரையாற்றிய கிம் ஜாங் அன், ஒட்டுமொத்த உலகத்தின் முன்னிலையில் அளித்த வாக்குறுதிகளை அமெரிக்கா காப்பாற்றத் தவறினால் வடகொரியா புதிய நடவடிக்கைகளை கையாளும் என எச்சரிக்கை விடுத்தார்.

இந்த நிலையில், டிரம்ப் – கிம் ஜாங் அன் இடையேயான சந்திப்பு பெப்ரவரி மாத இறுதியில் நடைபெறும் என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. எனினும், இந்த சந்திப்பு எந்த இடத்தில் நடைபெறும் என்பது குறித்து எந்த ஒரு தகவலையும் வெள்ளை மாளிகை குறிப்பிடவில்லை.

# இங்கிலாந்து இளவரசி மேகனின் குழந்தைக்கு ஞானப்பெற்றோராகும் பிரயங்கா சோப்ரா தம்பதி



லண்டன், ஜன.20

இங்கிலாந்து இளவரசர் சார்லஸ், டயானா தம்பதியரின் இளைய மகன் ஹாரி கடந்த ஆண்டு மே மாதம் தனது காதலி மேகனை திருமணம் செய்துகொண்டார். இப்போது மேகன் கர்ப்பமாக உள்ளார்.

மேகனுக்கு மே மாதம் பிரசவம் நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் தற்போது முதலே பிறக்கப்போகும் குழந்தைக்கு யார் ஞானப்பெற்றோர்களாக இருப்பார்கள் என்ற கேள்வி எழுந்துள்ளது.

அதாவது கிறிஸ்தவ மத முறைப்படி குழந்தைக்கு பெயர் சூட்டும் போது குழந்தையின் ஞானத்தாய், தந்தையாக தம்பதியினர் ஒருவர் இருக்க வேண்டும்.

அதன்படி, ஹாரியின் மூத்த சகோதரர் இளவரசர் வில்லியம், கேத் மிடில்டன் தம்பதியர் குழந்தையின் ஞானப்பெற்றோர் என கூறப்பட்டது. அதற்கு பின்னர் மேகனின் தோழி ஜெசிகா முல்ரோனியும், அவரது கணவரும் என பேசப்பட்டது.

ஆனால், இப்போது யாரும் எதிர்பார்க்காத வகையில் நடிகை பிரியங்கா சோப்ரா மற்றும் நிக் ஜோனாஸ் ஞானப்பெற்றோர் ஆக அமர வாய்ப்புள்ளது என்ற பரபரப்பு தகவல் வெளியாகியுள்ளது.

மேகனும் பிரியங்கா சோப்ராவும் நெருங்கிய தோழிகள் என்பதும் ஹாரி – மேகன் திருமணத்தில் பிரியங்கா கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# குடும்பத்திலிருந்து தன்னைக் காக்குமாறு மற்றுமொரு சவுதி பெண்ணும் கோரிக்கை

சவுதியில் மற்றுமொரு பெண் ஒருவர் தன் குடும்பத்திலிருந்து தன்னைக் காக்கும்படி சமூக வலைத் தளங்களின் உதவியை நாடியுள்ளார்.

இதுகுறித்து அரபிக் ஊடகங்கள் தரப்பில், "நோஜத் அல் மண்டில் என்ற பெண் தனது குடும்பத்தினர் தன்னைத் துன்புறுத்துகின்றனர் என்றும் எனவே தன்னைக் குடும்பத்தாரிடமிருந்து காக்கும்படியும் டுவிட்டர் மூலமாக உதவி கேட்டிருக்கிறார்.

அவர் சவுதியை விட்டு இன்னும் வெளியேறவில்லை. மேலும், தன்னைப் பற்றி எந்த அடையாளத்தையும் அவர் வெளியிடவில்லை. இதனை பொலிஸாரிடம் தெரிவிக்க வேண்டாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்" என்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

நோஜத்தின் இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் அதிகமாக பகிரப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு வேண்டிய உதவிகள் செய்து தரப்படும் என்று சவுதிப் பெண்கள் நல அமைப்பு தெரிவித்துள்ளது.

முன்னதாக, ரஹாஃப் மொகமது அல் குனான் (18) என்ற யுவதியும் தன்னை குடும்பத்திலிருந்து காப்பாற்றுமாறு தெரிவித்த நிலையில் கனடா அவருக்கு அடைக்கலம் அளித்தது குறிப்பிடத்தக்கது.

# உணவுக் கட்டுப்பாடு, கடும் உடற்பயிற்சிகள் மூலம் 95 கிலோ எடையைக் குறைத்து சிறுவன் சாதனை!

இந்தோனேசியாவில் 190 கிலோ எடையுடன் முடங்கிக் கிடந்த சிறுவன், கடும் உணவுக் கட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சியால் பாதி எடையைக் குறைத்து சாதித்துக் காட்டியுள்ளான்.

இந்தோனேசியாவின் மேற்கு ஜாவாவில் உள்ளது சிபுர்வசரி குக்கிராமம். இங்கு வசிப்பவர் அதி சோமந்திரி (47). இவரது மனைவி ரொகாயா (37). இவர்களுக்கு 2 குழந்தைகள். அவர்களில் ஒருவன் ஆர்யா பெர்மனா. பத்து வயதில் 190.5 கிலோ. இதனாலேயே இந்தோனேசியாவில் அதிக எடை கொண்ட சிறுவன் என்று ஊடகங்களில் பிரபலமானான்.

டாக்டர்கள், உணவியல் வல்லுநர்களின் அறிவுரைப்படி இனிப்பு, இனிப்பு கலந்த குளிர்பானங்கள், சீனி சேர்த்த உணவு வகைகளை ஆர்யாவுக்கு தவிர்த்தனர். அத்துடன் கடும் உடற்பயிற்சியும் அவனுக்கு சொல்லித்தந்தனர். அதற்கு அவனும் ஒத்துழைத்தான்.

தற்போது ஆர்யா பெர்மனாவுக்கு வயது 12. இரண்டு ஆண்டு கடும் போராட்டம், உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சியால் தற்போது 95 கிலோ எடையைக் குறைத்து சாதித்துவிட்டான். கடந்த ஏப்ரல் மாதம் எடை குறைப்பு அறுவை சிகிச்சையும் ஆர்யாவுக்கு செய்யப்பட்டது. அதன்பிறகு 3 வாரங்களில் அவனது எடை கணிசமாகக் குறைந்தது.

தற்போது நன்றாக நடக்கிறான். நன்றாக படித்து வந்த ஆர்யா, எடை அதிகரிப்பால் பள்ளிக்கு செல்ல முடியவில்லை. தற்போது 2 ஆண்டுகள் கழித்து மீண்டும் பள்ளிக்குச் செல்ல தொடங்கிவிட்டான்.



"இப்போது நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். நடக்கிறேன், விளையாடுகிறேன். கால்பந்தாட்டம்தான் எனது விருப்பம். தொழில்முறை கால்பந்தாட்ட வீரராக வரவேண்டும் என்பதுதான் எனது ஆசை. லிவர்பூல் எவ்சி கிளப்தான் எனக்கு பிடித்தமானது. ராபர்ட்டோ பிர்மினோதான் எனக்கு பிடித்த கால்பந்தாட்ட வீரர். அவரை போல நான் விளையாட விரும்புகிறேன்" என்கிறான் ஆர்யா.

## உரோம் நகரில் குளிர்காலம் துவங்கிவிட்டது

உரோம் நகரில் குளிர்காலம் துவங்கிவிட்டது என்பதை உணர முடிகிறது. சூரிய வெளிச்சம் கண்ணைப் பறிக்கும் வகையில் இருந்தாலும் குளிரின் தாக்கம் அதிகமாக உள்ளது. குளிரின் காரணமாக புனித திருத்தந்தை ஆறாம் பவுல் அரங்கிலேயே திருப்பயணிகளைச் சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ் 'வானகத் தந்தாய்' என்ற இயேசு கற்பித்த செபம் குறித்து தன் விளக்கத்தைத் தொடர்ந்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## 'வானகத் தந்தாய்' என்ற செபம்

நம் வானகத் தந்தையின் முடிவற்ற அன்பையும் இரக்கத்தையும் மன்னிப்பையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்று ஆவல்கொண்ட இயேசு 'காணாமல்போன மகன்' என்ற உவமையில் அதனை உயிரோட்டமாய் காண்பிக்கிறார். வானகத் தந்தையின் இந்த அன்பில் தாய்மைக்குரிய பண்பும் அடங்கியுள்ளது. நம் வாழ்வின் மிக துன்பகரமான வேளைகளிலும் அச்சம் கொள்ளாமல் வானகத் தந்தையை நோக்கி இயேசு கற்பித்த 'அப்பா, எங்கள் தந்தையே' என்ற வார்த்தைகளுடன் செபிப்போம்.

# மனிதத்தை நேசித்து ஆற்றும் மகத்தான பணி: அனைவரையும் வெகுவாகப் பாராட்டுகிறேன்





நயினை கிருபானந்தா

152 பருத்தித்துறை வீதி கோப்பா யில் தெற்கில் நவீன வசதிகளுடன் அழகுற அமைக்கப்பட்டுள்ள லில்லி நலவாழ்வு இல்லத்தின் (லில்லி கெயா கோம்) இரண்டாம் கட்டப்பணிகள் நிறைவாகி 15 ஜனவரி 2019 அன்று திறந்து வைக்கப்பட்டது.

ஆசிரியரும் சமூக ஆர்வலரும், யாழ் இலக்கிய வட்ட செயலருமான நயினை கிருபானந்தாவும் மேற்படி விழாவில் கலந்து கொண்டார்.

அங்கு அவர் உரையாற்றும் போது –

லில்லி நலவாழ்வு இல்ல நிறுவுநர் சாள்ஸ் அழகறட்ணம் தேவசகாயம் அவர்கள் மனிதத்தை நேசித்து ஆற்றும் இந்த மகத்தான பணியை வெகுவாக பாராட்டுகிறேன். தனது மகளுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தால் காணி தேவை என்பதற்காக தனது சகோதரனுக்கு காணி கொடுக்க மறுக்கும் மனிதர் இருக்கும் இப்பூமியில் மனிதத்தை நேசித்து மதங்களைக் கடந்து ஆற்றும் இந்த மகானை ஓர் இந்து மத மனிதராக இருந்து பாராட்டுகிறேன்.

சிவபூமி முதியோர் இல்ல திறப்பு விழாவிற்கு முதல் நாளே தேவை கருதி முதியோரை தங்க அனுமதித்திருந்தோம். திறப்பு விழாவன்று அதிகாலை ஓர் அறையில் இருந்து புகை மண்டலமாக புகை வந்து கொண்டிருந்தது. ஏதோ விபரீதம் நடந்து விட்டது. அறையில் இருந்தவர் தன்னை எரித்துக் கொண்டாரோ என கத்தி அனைவரையும் அழைத்துக்கொண்டு அறையை உடைத்து திறந்த போது அந்த அறையில் அனுமதிக்கப்பட்டிருந்த முதியவர் காலமை எனது கையாலை ஒரு கோப்பி வைத்து குடிக்காவிட்டால் எனக்கு சரிவராது என சர்வ சாதாரணமாகச் சொன்னார்.

அந்த அறையின் அழகு தரையில் பதிக்கப்பட்ட மாபிள் எதையும் பொருட்படுத்தாது அறையின் நடுவில் கல்லு வைத்து தேநீர் வைத்துக்கொண்டிருந்தார். குழந்கைகளையும் முதியோரையும் பராமரிப்பது ஒரு இலகுவான பணியல்ல. இந்த சிக்கல் மிக்க கடினமான பணியை துணிந்து ஆற்ற முன்வந்துள்ள சம்பந்தப்பட்ட அனைவரையும் வாழ்த்துகிறேன். பாராட்டுகிறேன். இது போன்ற மனிதநேய பணிகள் இந்த மண்ணில் தொடர வேண்டும். – என்றார்.

யாழ் சுண்டிக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலய பங்கை (சன் சுவான் கோவில்) சேர்ந்த அமரர்களான திரு திருமதி தேவசகாயம் மேரி கிறேஸ் லில்லி தம்பதியினரின் ஞாபகமாக பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் அவர்களின் மகன் சாள்ஸ் அழகறட்ணம் தேவசகாயம் என்பவரை நிறுவன உரிமையாளராகக் கொண்ட லில்லி நலவாழ்வு இல்லத்தின் அடுத்த கட்டம் உரிமையாளரின் மகனின் பெயரில் தோமா அப்பாட்மென்ஸ் என திறந்து வைக்கப்பட்டது. இந்த விழாவில் யாழ் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி அதிபர் கலாநிதி ரீ.ஜே. கிருபாகரன் அடிகளார் மேற்படி தோமா அப்பாட்மென்ஸ் என்ற கட்டடத்தை ஆசீர்வதிக்க உரிமையாளர் சாள்ஸ் அழகறட்ணம் தேவசகாயம் அவர்களின் துணைவியாரான பிரெஞ்சுப் பெண்மணி கிறிஸ்ரின் சாள்ஸ் திறந்துவைத்தார். குடும்ப அங்கத்தவர் அனைவரும் வெளிநாடுகளில் இருந்து மேற்படி நிகழ்வுக்காக வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ் ஆயரை காப்பாளராகக் கொண்ட மேற்படி லில்லி நலவாழ்வு இல்லம் கட்டிட மற்றும் நிர்வாகப்பணிகளை யாழ் அமலமரித் தியாகிகள் சபை சமூக அபிவிருத்திப்பணி ஆலோசகர் ஏ.ஜீவாபோல் அ.ம.தி. அடிகளார் மேற்பார்வையிட்டு நடத்திக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## உண்மையின் எண்ணங்கள்

### கோப்பாய் லில்லி நலவாழ்வு இல்லம்

3 ஏக்கர் பரப்பளவு கொண்ட பெரும் வெளியில் நல்ல விளைச்சலுக்குரிய செம்மண் மற்றும் வற்றாத இனிய குடிதண்ணீர் கொண்ட கோப்பாய் மண்ணில் 30 அறைகளுடன் ஐரோப்பிய நாடுகளில் உள்ளது போன்று அனைத்து நவீன வசதிகளும் கொண்டதாக லில்லி நலவாழ்வு இல்லத்தை அமைத்துள்ள சாள்ஸ் அழகறட்ணம் தேவசகாயம் பாராட்டப்பட வேண்டியவர். புலம்பெயர் நாடுகளில் உள்ள வசதி படைத்தோர் இது போன்ற பல்வேறுபட்ட பணிகளில் குறிப்பாக கல்விக்கு உதவும் பணிகளில் ஈடுபடவேண்டுமென காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு வேண்டுகோள் விடுக்கிறது.

## சில்லாலை யோசவ்வாஸ் யாழ் மறைமாவட்ட யாத்திரைத் தலத்தில் யாழ் ஆயர்




சில்லாலை புனித யோசவ்வாஸ் அடிகளாரின் யாழ் மறைமாவட்ட யாத்திரைத்தலத்தில் நடைபெற்ற 2019ஆம் ஆண்டுக்கான பெருவிழாவில் யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து சிறப்பித்தார். பொதுநிலையினர் எவ்வாறு தமது அழைத்தல்களை இனங்கண்டு திருஅவையில் பணியாற்ற முடியும் என்பதற்கு புனித யோசப்வாஸ் அடிகளோடு இணைந்து பணியாற்றிய பொதுநிலையினர் நமக்கு முன்னுதாரணம். இவ் அழைத்தல் ஆண்டில் பொதுநிலையினர் தமது அழைத்தல்களை இனங்கண்டு தம்மை பணிவாழ்வுக்கு அர்ப்பணிக்கும் ஆண்டாக வேண்டும் என ஆயர் மறையுரையில் குறிப்பிட்டார்.

# மகாகல்கமுவ யோசவ்வாஸ் தேசிய யாத்திரைத்தலத்தில் யாழ் ஆயர்



குருநாகல் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி கரல்ட் அன்ரனி பெரேரா ஆண்டகையின் அழைப்பில் யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை மகாகல்கமுவ புனித யோசவ்வாஸ் தேசிய யாத்திரைத்தலத்தில் 15 ஜனவரி 2019 அன்று நடைபெற்ற வருடாந்த பெருவிழாவில் கலந்து கொண்ட போது எடுக்கப்பட்ட இப்படத்தை காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் பார்வைக்கு தருகிறோம்.

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு வீதியில் அமைந்துள்ள புதுக்குடியிருப்பு குழந்தை இயேசு ஆலயத்தின் 2019ஆம் ஆண்டு திருவிழாவிற்கு ஆயத்தமாக நடைபெற்ற வேஸ்பர் ஆராதனைக்கு முன்னர் பங்குத்தந்தை எம். சுதர்சன் அடிகளார் எல்லா ஒழுங்குகளையும் மேற்கொண்ட பின்னர் அனைத்தும் சரியா என ஆலய முன்றிலில் நின்று மேற்பார்வையிட்டார். அவ்வேளை எடுக்கப்பட்ட படம்.



# வடக்கு ஆளுநர் தலைமையில் மாகாண தைப்பொங்கல் விழா

முல்லைத்தீவு, ஜன. 20

வடக்கு மாகாணத் தைப்பொங்கல் விழா ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் முல்லைத்தீவு யோகபுரம் யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் கோவில் மண்டபத்தில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண கலாசாரத் திணைக்களம் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் தமிழர்களின் பாரம்பரிய கலாசார விழுமியங்களைத் தாங்கிய பல்வேறுபட்ட கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த பொங்கல் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய ஆளுநர், வடக்கு மாகாணத்தின் கல்வித் தரமானது தற்போது மிகவும் கீழ்நிலையில் இருப்பதோடு அதனை மாற்றி வடக்கு மாகாணத்தை கல்வியில் மிகச் சிறந்த மாகாணமாக மாற்றுவதற்கு அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். (ஐ)





# வவுனியாவில் குடிதண்ணீர்த் திட்டங்களை மக்களிடம் கையளித்தார் மஸ்தான் எம்.பி.



வவுனியா, ஜன. 20

வவுனியாவில் குடிதண்ணீர்ப் பிரச்சினையை எதிர்கொள்ளும் கிராமங்களுக்கான குழாய் கிணறுகளை நாடாளுமன்ற உறுப்பினர் காதர்மஸ்தான்கையளித்தார்.

வவுனியா மாவட்டத்தில் குடிதண்ணீர்ப் பிரச்சினையை எதிர்நோக்கும் ஆசிகுளம், அம்மலாங்கொடவ, ஹெட்டகம, கணேசபுரம், மணிபுரம், பாவற்குளம், மெனிக்பாம், புதுக்குளம்ஆகியகிராமமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒவ்வொரு கிராமத்திற்கும் ஏழு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சோலர் பவர் நீர்த்தாங்கியுடன் கூடிய குழாய்க் கிணறுகள் அமைத்து மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டன.

ஐ.எஸ்.ஆர்.சி அமைப்பின் நிதி உதவியில் இந்தக் குடிதண்ணீர்த்திட்டம்வழங்கப்பட்டது. (ஐ-100)

# கொக்கெய்ன் வர்த்தகருக்கு தூக்குத் தண்டனை தீர்ப்பு!

கொழும்பு, ஜன. 20

கொஹுவளைப் பிரதேசத்தில் கொக்கெய்ன் போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்டுவந்த வர்த்தகர் ஒருவரைக் குற்றவாளியாக இனங்கண்ட கொழும்பு மேல் நீதிமன்றம், அந்நபருக்கு நேற்று முன்தினம் மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது.

போதைப்பொருள் செயற்பாடுகள் காரணமான, சமூகத்தில் மோசமான நிலை உருவாகியுள்ளதாகச் சுட்டிக்காட்டிய நீதிவான் கிஹான் குலதுங்க, போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோருக்கு அதிகபட்ச தண்டனைகளை வழங்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்த மரணத்தண்டனையானது, போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமையும் எனவும் அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

கொஹுவளை பிரதேசத்தைச் சேர்ந்த, நலின் சாருக் குலதுங்க என்பவரே இவ்வாறு குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு, கொஹுவளை பிரதேசத்தில், 62.06 கிலோ கிராம் கொக்கைன் போதைப் பொருளை, விற்பனைக்காக தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டுக்கு எதிராக, வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கலைத்தூது அழகியல் கல்லூரியின் பத்தாவது பரிசளிப்பு விழா இன்று


யாழ்ப்பாணம், ஜன. 20

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகின்ற திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் பத்தாவது பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இல.286,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் திருமதி மேரி அஞ்சலா அல்போன்ஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தனும், சிறப்பு விருந்தினராக யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபர் அருட்பணி அ.பீ.திருமகனும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

நிகழ்வில் மாணவர்களின் பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. பரிசளிப்பு விழாவுக்கான அனுசரணையை கனடா திருமறைக் கலாமன்றம் வழங்குகின்றது. (ஐ)

# ரணிலின் சுயசரிதை நூல் சீன மொழியில் வெளியீடு



கொழும்பு, ஜன. 20

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் வாழ்க்கை வரலாற்று நூல் சீன மொழியில் வெளியிடப்பட்டுள்ளது. இந்தச் சுயசரிதை புத்தகத்தை பிரதமரிடம் கையளிக்கும் நிகழ்வு அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இலங்கை அரசின் உயர் பொறுப்பு வகிக்கும் ஒருவரது வாழ்க்கை வரலாறு சீன மொழியில் பிரசுரிக்கப்பட்டுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

இந்தப் புத்தகத்தை தமது புத்தக நிலையங்கள் மற்றும் நூலகங்கள் வாயிலாக வாசகர்களிடம் கொண்டு சேர்க்க எதிர்பார்த்துள்ளதாகச் சீன வெளியீட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

சம்பத் பண்டார என்பவரால் எழுதப்பட்ட பிரதமரின் வாழ்க்கை வரலாறு, பேராசிரியர் சங்யூ மற்றும் யின் ஜின் ஆகியோரால் சீன மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (ஐ)

# நீதிமன்ற உத்தரவை மறைத்துவிட்டு புதிய சாரதிப் பத்திரம் பெற்ற சாரதி!

## ஏழரைச் சனியால் சிக்கிக்கொண்டாராம்

யாழ்ப்பாணம், ஜன. 20

நீதிமன்ற உத்தரவால் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த சாரதி அனுமதிப் பத்திரம் தொடர்பான தகவலை மூடி மறைத்துவிட்டு அது தொலைந்துவிட்டது எனப் போலி முறைப்பாட்டை வழங்கி பொலிஸ் அறிக்கை பெற்றதுடன் அதன்மூலம் புதிய சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்ற அரச சாரதி ஒருவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ஏழரைச் சனி நடக்கிறது போல், யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவிலேயே முன்னர் செய்த அதே குற்றச்சாட்டுக்குப் பின்னரும் மாட்டிக்கொண்டுவிட்டார் என்று சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சுமினி விக்னேஸ்வரன் மன்றில் தெரிவித்தார்.

சந்தேகநபருக்கு இப்போதும் ஏழரைச் சனி உள்ளது. அதனால்தான் அவர் விளக்கமறியலுக்குச் செல்கிறார் என்று தெரிவித்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் அந்தோனி சாமி பீற்றர் போல், சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

மதுபோதையில் வாகனம் செலுத்தினார் என்ற குற்றச்சாட்டில் சாரதி ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டார். அவர் அரச திணைக்களம் ஒன்றில் சாரதியாகப் பணியாற்றுகின்றார்.

அவரை பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று குற்றச்சாட்டுப் பத்திரம் தயாரித்த போது, அவர் கடந்த வருடம் நடுப் பகுதியிலும் இதே குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார் என்பது தெரியவந்தது.

அப்போது அவர் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் யாழ்ப்பாணம் நீதிமன்றால் அவரது சாரதி அனுமதிப்பத்திரம் ஒரு ஆண்டுக்கு இடைநிறுத்திவைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. எனினும் அந்தத் தடைக் காலப் பகுதிக்குள் அந்தச் சாரதியிடம் புதிய சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளமை கண்டறியப்பட்டது.

அது தொடர்பில் சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், எனது சாரதி அனுமதிப்பத்திரம் தொலைந்துவிட்டதுஎனயாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸ் அறிக்கை வழங் கப்பட்டது. அதனைப் பயன்படுத்தி புதிய சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொண்டேன் என்று தெரிவித்துள்ளார்.

அதனால் மதுபோதையில் வாகனம் செலுத்தியமை மற்றும் மோசடியாக புதிய சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதி மன்றில் முற்படுத்தப்பட்டார். (ஐ-07)

# சகல தரப்புடனும் எனக்கு நல்லுறவு

## கூறுகிறார் தவராசா

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 20

அனைத்துத் தரப்பினருடனும் நல்லுறவுடனேயே தான் இருக்கிறார் எனவும் யாருடனும் பகைமை கொள்ளவில்லை எனவும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சுப் பதவி கிடைத்த மறுநாளே தவராசா அவருடன் இணைந்துவிட்டார் என கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்து தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நான் எல்லோருடனும் உறவில் தான் இருக்கிறேன். டக்ளஸுடன் அன்றிலிருந்து இன்று வரை உறவு வைத்திருக்கிறேன். ஈ.பி.டி.பியில் இருந்து நான் விலகவும் இல்லை. என்னை விலக்கவும் இல்லை. எவருடனும் நான் பகைமை கொள்ளவில்லை.

இனி நாடாளுமன்றத் தேர்தல் அல்லது மாகாண சபைத் தேர்தல்களிலோ போட்டியிடுவது தொடர்பான எண்ணம் எதுவும் இல்லை. ஏனெனில் தேர்தல் அரசியலில் ஈடுபட்டால் உண்மைகளை மூடிக்கொண்டு தான் அரசியல் செய்யவேண்டும். எனவே தான் அந்த எண்ணம் எனக்கு இல்லை–என்றார். (ஐ-07)

காலைக்கதிர் Kalaikkathir




## சிங்கர் கிண்ண தொடர்
# சென்.ஜோன்ஸ் படு தோல்வி

யாழ்ப்பாணம்,ஜன.20

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட்சங்கத்தின்பிரிவு II அணிகளுக்கு இடையிலான சிங்கர் கிண்ண போட்டித் தொடரின் முதலாவது சுற்று ஆட்டமொன்றுக்காக, யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மற்றும் மாத்தறை ராஹுல கல்லூரி அணிகள் மாத்தறை உயன்வத்த அரங்கில் புற் தரை ஆடுதளத்தில் மோதின

போட்டியில் மிக மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய சென். ஜோன்ஸ் வீரர்கள் 163 ஓட்டங்களால் படு தோல்வியைத் தழுவினர்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கு களம் நுழைந்த மாத்தறை வீரர்கள் வெறுமனே 21 ஓட்டகளுக்கு முதல் 3 விக்கெட்டுக்களை இழந்தனர். தொடர்ந்து வந்த வீரர்களையும் சென். ஜோன்ஸின் சுழல் பந்து வீச்சு ஜோடியான செல்வதாஸ் சரன் மற்றும் மோர்ஃபின் அபினாஷ் வெளியேற்ற ராஹுல கல்லூரியினர் 83 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தனர்.

துடுப்பாட்டத்தில் அணியின் தலைவர் பாக்ய எதிர்வீர 27 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் சரன் 4 விக்கெட்டுக்களையும், அபினாஷ் மற்றும் டினோசன் 3 மற்றும் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தனர்.

சென். ஜோன்ஸ் வீரர்கள் முதலாவது இன்னிங்ஸில் முன்னிலை பெறுவதற்கு ஏதுவான ஓட்ட எண்ணிக்கையாக ராஹுல கல்லூரியினர் பெற்ற 83 ஓட்டங்கள் அமைந்திருந்தபோதும் துடுப்பட்டத்தில் தடுமாறிய சென். ஜோன்ஸ் வீரர்கள் வெறுமனே 63 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தனர். குறிப்பாக முதலாவது விக்கெட் 15 ஓட்டங்களை பெற்றிருக்கையிலும், இறுதி 4 விக்கெட்டுக்களும் வெறுமனே 5 ஓட்டங்களுக்குள்ளும் வீழ்த்தப்பட்டிருந்தன.

சுழல் பந்துவீச்சாளர்களான திமிர சந்திக 6 விக்கெட்டுக்களையும், பசிந்து அவிஷ்க 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியிருந்தனர்.

20 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய ராஹுல கல்லூரியினர் பினர சங்கீத் (37), சசித் மனுசங்கர (34) தரிந்து ராஜபக்ஷ (30) ஆகியோரது துடுப்பாட்டத்தின் உதவியுடன் 181 என்ற வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக்கொண்டனர்.

சென். ஜோன்ஸ் சார்பில் அபினாஷ், சரன் ஜோடி தலா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தனர்.

202 என்ற வெற்றி இலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் வீரர்கள் வெறுமனே 38 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும்பறிகொடுத்தனர். இரண்டாவது இன்னிங்ஸில் மற்றொரு சுழல் பந்து வீச்சாளரான சசித் மனுசங்கர 6 விக்கெட்டுக்களையும், திமிர சந்திக 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியிருந்தனர்.

# தப்பினார் குசல் மெண்டிஸ்

கொழும்பு,ஜன.20

கிரிக்கெட் ஆஸ்திரேலிய பதினொருவர் அணிக்கு எதிரான பயிற்சிப் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தின் போது விரல் உபாதைக்கு முகங்கொடுத்திருந்த இலங்கை அணியின் மத்தியவரிசை துடுப்பாட்ட வீரர் குசல் மெண்டிஸின் உபாதை தீவிரமாக இல்லையென எக்ஸ்ரே பரிசோதனை முடிவுகளின் படி தெரியவந்துள்ளது.



குசல் மெண்டிஸிற்கு மேற்கொள்ளப்பட்ட எக்ஸ்ரே பரிசோதனை அறிக்கையின்படி, அவரது விரலில் முறிவுகளோ அல்லது பெரிய காயங்களோ இல்லையென இலங்கை கிரிக்கெட் சபையின் முகாமையாளர் ஜெரில் வௌர்டஷ் தெரிவித்துள்ளார்.

# இலங்கை கிரிக்கெட் அணியின் போட்டி அட்டவணை வெளியீடு



கொழும்பு,ஜன.20

இலங்கை கிரிக்கெட் அணி அடுத்து பங்கேற்கவுள்ள கிரிக்கெட் தொடருக்கான பட்டியல் வெளியாகியுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள இலங்கை அணி இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. ஜனவரி 24ஆம் திகதி முதல் டெஸ்ட் போட்டி ஆரம்பமாகிறது.

இரண்டாவது டெஸ்ட் போட்டி பெப்ரவரி 1ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதன்பின்னர் தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் இலங்கை அணி டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி20 தொடரில் விளையாடுகிறது.

இரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி பெப்ரவரி 13ஆம் திகதியும், இரண்டாவது போட்டி பெப்ரவரி 21ஆம் திகதியும் நடக்கவுள்ளது.

இதன்பின்னர் நடக்கும் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி மார்ச் 3 ஆம் திகதி நடைபெறுகிறது.

மார்ச் 6 இரண்டாவது போட்டியும், மார்ச் 10 மூன்றாவது போட்டியும், மார்ச் 13 நான்காவது போட்டியும், மார்ச் 16 ஐந்தாவது போட்டியும் நடைபெறவுள்ளன.

இதையடுத்து ரி 20 தொடர் நடக்கவுள்ளது. மார்ச் 19ஆம் திகதி முதல் போட்டியும், மார்ச் 22ஆம் திகதி இரண்டாவது போட்டியும், மார்ச் 24ஆம் திகதி மூன்றாவது போட்டியும் நடைபெறவுள்ளன.

# இந்திய அணிக்காக அதிக அர்ப்பணிப்பு டோனியை புகழ்கிறார் கோஹ்லி




மெல்போர்ன்,ஜன.20

இந்திய கிரிக்கெட்டுக்கு டோனியை விட அதிக அர்ப்பணிப்பு கொண்ட வீரர் யாரும் கிடையாது. இந்திய அணிக்காக அவர் நிறைய பங்களிப்பு அளித்து இருக்கிறார் என்று இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

மெல்போர்னில் நடைபெற்ற கடைசி ஒருநாள் போட்டியில் டோனியின் ஆட்டத்தால் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி இந்தியா முதன்முறையாக கோப்பையை கைப்பற்றியது.

வெற்றிக்கு பிறகு இந்திய அணித் தலைவர் விராட் கோலி கூறுகையில், 'இது துடுப்பாட்டத்துக்கு சிறந்த ஆடுகளம் அல்ல. அதனால் நிலைத்து நின்று ஆட வேண்டியிருந்தது. கடைசிக் கட்டத்தில் நாங்கள் கொஞ்சம் பதற்றம் அடைந்தாலும், டோனி, ஜாதவ் ஜோடியினர் சரியாக என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து அதற்கு ஏற்ப செயல்பட்டனர்.

டோனியை நினைத்து ஒரு அணியாக மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். அவர் இந்தத் தொடரில் கணிசமான ஓட்டங்கள் எடுத்து இருக்கிறார். எப்போதும் ஓட்டம் குவிக்கும்போது, அது பழைய நிலைக்கு திரும்பி, நம்பிக்கையை மீட்டெடுக்க உதவும்.

டோனி குறித்து வெளியில் நிறைய பேசுகிறார்கள். ஆனால் இந்திய கிரிக்கெட்டுக்கு டோனியை விட அதிக அர்ப்பணிப்பு கொண்ட வீரர் யாரும் கிடையாது என்பதை நாங்கள் அறிவோம்.

இந்திய அணிக்காக அவர் நிறைய பங்களிப்பு அளித்து இருக்கிறார். மிகவும் புத்திசாலித்தனமான ஒரு கிரிக்கெட் வீரர். அணிக்கு என்ன செய்ய வேண்டும் என்பது அவருக்கு தெரியும். அதனால் அவரை, அவரது போக்கிலேயே விட்டுவிட வேண்டும்' என்றார்.

தொடர்நாயகன் விருது பெற்ற டோனி கூறுகையில், 4 ஆவது துடுப்பாட்ட வரிசையில் நான் உற்சாகமாக அனுபவித்து விளையாடினேன். நாம் எந்த வரிசையில் துடுப்பாட்டம் செய்கிறோம் என்பதை விட அணியின் சமச்சீர் தன்மை மாறக்கூடாது. அது தான் முக்கியம். துடுப்பாட்டத்தில் நான் எந்த வரிசையிலும் களம் காணத் தயாராக இருக்கிறேன். மீண்டும் 5 அல்லது 6 ஆவது வரிசை என்றாலும் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வேன்.

14 ஆண்டுகள் கிரிக்கெட் ஆடிவிட்ட நிலையில், இப்போது 6 ஆவது வரிசையில் இறங்க மாட்டேன் என்றோ, 4 அல்லது 5 ஆவது வரிசை தான் தேவை என்றோ கூற முடியாது. அணிக்கு எந்த வரிசையில் நான் தேவைப்படுகிறேனோ அந்த வரிசையில் இறங்கி விளையாடுவேன்' என்றார்.

## மாகாணத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் செலவீனங்களைக் கட்டுப்படுத்தல் உட்பட மேலும் சில காரணங்களைக் கருத்திற்கொண்டு ஒரே நாளில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பது தான் ஆளுங்கட்சியின் நிலைப்பாடாகவும் இருக்கின்றது.

எனவே, இன்னும் பதவிகாலம் முடியாதுள்ள மேல் மாகாணசபை உட்பட மூன்று சபைகளும் முன் கூட்டியே கலைக்கப்பட், அதன் பின்னர் 9 சபைகளுக்கும் மே மாதத்தில் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

தேர்தல் அறிவிப்பு வெளியான பின்னரே தேர்தல் களம் சூடுபிடிக்கும் என எதிர்பார்க்கப்பட்டாலும் முன்கூட்டியே தேர்தல் திருவிழா களைகட்ட ஆரம்பித்துள்ளது. தொகுதி அமைப்பாளர்கள் நியமனம், கூட்டணி அமைத்தல், வேட்பாளர் தேர்வு என தேர்தலுக்கே உரித்தான சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

தேசிய மட்டத்திலான தேர்தலொன்றுக்கான ஒத்திகையாக – வெள்ளோட்டமாக – மக்களின் நாடிப்பிடித்துப் பார்ப்பதற்கான கருவியாக மாகாணசபைத் தேர்தல் பார்க்கப்படுவதால் அனைத்து விதத்திலும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, மக்கள் விடுதலை முன்னணி ஆகியன தென்னிலங்கையில் களம் காணவுள்ளன. வழமையாக மும்முனைப் போட்டியே இடம்பெறும். எனினும், இம்முறை பலமுனைப்போட்டி எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேபோல் மலையகத்திலும் பிரதான தொழிற்சங்கங்களின் ஆதரவுடன் தேசிய கட்சிகள் போட்டியிட தயாராகிவருகின்றன.

எனினும், கடந்த உள்ளாட்சிச் சபைத் தேர்தல்போல், மாகாணசபைத் தேர்தலிலும் ஒருசில மாவட்டங்களில் தனித்து களமிறங்குவது குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மந்திராலோசனை நடத்திவருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்திலேயே தமிழ் முற்போக்குக் கூட்டணி களமிறங்கும் என அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், இறுதி நேரத்தில் புது வியூகம் வகுக்கப்படலாம் எனவும் கூறப்படுகின்றது.

அதேவேளை, மலையகத்தில் இரு பிரதான அணிகளிலிருந்தும் புது முகங்கள் களமிறக்கப்படவுள்ளன. சில மூத்த உறுப்பினர்களுக்கு கதவடைப்பு இடம்பெறலாம் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

சம்பள விவகாரத்தில் இரண்டு பிரதான கட்சிகளாலும் தோட்டத்தொழிலாளர்கள் ஏமாற்றப்பட்டனர். பிரதான தொழிற்சங்கங்களும் அவர்களைக் கைவிட்டன. எனவே, பதிலடி கொடுப்பதற்கான ஆயுதமாகத் தோட்டத்தொழிலாளர்கள் வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும் என சமூக ஆர்வளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஐ)

## வடக்குப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்னாண்டோ தெரிவித்தார்.

வடக்கில் பணி புரியும் 230 பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றம் இவ்வாறு இரத்து செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இரண்டு வருடங்கள் பூர்த்தியான பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த இடமாற்றத்துக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ள அந்த அதிகாரிகள், வடக்கில் பணியாற்றத் தாம் விரும்புவதாகத் தெரிவித்துள்ளனர்.

அதனடிப்படையிலேயே இந்த இடமாற்றங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## ஊடக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பால சிறிசேன பதவியேற்று நான்கு ஆண்டுகள் கடந்துவிட்டன.

ஊடகவியலாளர்களுக்கு எதிராக அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிட்ட குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்பது அவர் வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்றாகும்.

எனினும், நல்லாட்சி அரசானது, எந்தவொரு குற்றவாளிக்கும் இன்னும் தண்டனை வழங்கவில்லை. மாறாக குற்றவாளிகளைப் பாதுகாக்கும் நோக்கில் செயற்படுவதையே காணக்கூடியதாக வுள்ளது.

எனவே, நீதியை நிலைநாட்டுமாறு கோரி ஜனவரி மாதம் 29ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்படவுள்ளது.

அத்துடன், அதே தினம் முற்பகல் 10.30 மணிக்கு ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பிலுள்ள கிளை அலுவலகத்தில் இது தொடர்பில் 'ஒன்லைன்' மூலம் கையொப்பம் திரட்டப்பட்ட மனுவொன்றும் கையளிக்கப்படவுள்ளது.

கீழ்வரும் பகுதியின் ஊடாக இந்த மனுவில் நீங்களும் கையொப்பமிடலாம். http://chng.it/WK2dVwDZtq – என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## தமிழில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

தமிழ்மொழி தொடர்பில் தெளிவு பெற்ற ஒருவரே ஜனாதிபதியாக வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதி எடுத்த தீர்மானம் சட்டவிரோதமானது என்று நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளதால் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் கூறினார்.

சிறுபான்மை இனத்தவர்களான தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பேசுகின்ற தமிழ்மொழி தொடர்பில் தெளிவு பெற்ற ஒருவரே ஜனாதிபதியாக வேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்தினார். (ஐ)

## 1000 ரூபாவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

இதனால் அடிப்படை நாட்சம்பளமாக 650 அல்லது 700 ரூபாவை ஏற்பதற்கு தொழிற்சங்கங்கள் தயாராகிவருகின்றன என்றும்,

நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள கூட்டு ஒப்பந்தப் பேச்சில் இது தொடர்பில் இறுதி இணக்கப்பாடு எட்டப்படும் என்றும் தெரியவருகின்றது.

தற்போது அடிப்படை நாட்சம்பளமாக 500 ரூபாவைப் பெற்று வரும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அத்தொகையை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொழிலாளர்களின் கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் வகையில் மலையக சிவில் அமைப்புகளும் தொடர் போராட்டங்கள் நடத்திவருகின்றன.

எனினும், ஆயிரம் ரூபா என்ற தொழிலாளர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படாமலேயே இம்முறையும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் எனத் தெரியவருகின்றது. (ஐ)

## அமெரிக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எலும்புக்கூடுகளில் இருந்து தெரிவுசெய்து எடுக்கப்பட்ட மனித எச்சங்களின் மாதிரிகள் கார்பன் பரிசோதனைக்காக எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை அமெரிக்காவுக்குக் கொண்டு செல்ல இருப்பதாக அகழ்வுப் பணிக்குப் பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஸ தெரிவித்தார்.

இந்த மனித எச்சங்களின் மாதிரிகளுடன் சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷவும் அமெரிக்கா செல்லவுள்ளார்.

மேலும், அமெரிக்காவுக்கு ஆய்வுக்காக எடுத்துச் செல்லும் குழுவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் பிரதிநிதி ஒருவரை இணைத்துக் கொள்ள மன்னார் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மன்னார் நீதிவான் நீதிமன்றத்தினூடாக இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் பத்திரத்தை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட நீதிமன்றம் இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

மன்னார் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணி 132 நாட்களுக்கு மேலாகத் தொடர்கின்றது.

இதுவரை இந்த அகழ்வுப் பணிகளின்போது 300 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்ட நிலையில் 294 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அவற்றில் 23 எலும்புக்கூடுகள் சிறுவர்களுடையவை என அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரயிலுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுள்ளது. பிரதேசத்தில் உள்ள ரயில் கடவையைக் கடக்க முற்பட்டபோது மோட்டார் சைக்கிள் ரயிலுடன் மோதியுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கைதிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்குக் கொண்டுச்செல்வதற்கான நடவடிக்கைகளை, சிறைக் கைதிகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பு முன்னெடுத்துள்ளது.

இந்தக் காணொளி வெளியிடப்பட்ட விவகாரம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள, இரண்டு விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையிலேயே, இது தொடர்பாக, ஐ.நா மனித உரிமை பேரவையின் கவனத்துக்கு இந்த விவகாரம் கொண்டுச் செல்லப்படவுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வுகளின்போது, இது தொடர்பாக முறையிட்டு கேள்வியெழுப்பவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் காணொளி விவகாரத்தையடுத்து, இத்தாக்குதலுக்கு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டனம் வெளியிட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் தொடர்பில், கடந்த 2018ஆம் ஆண்டு சிறைச்சாலைக்குச் சென்ற மனித உரிமைகள் ஆணைக்குழு, கைதிகளை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டுமெனச் சிறைச்சாலை தலைவரிடம் கோரிக்கைகளை முன்வைத்ததாகவும், எனினும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படாத நிலையிலேயே தற்போது கண்டனம் வெளியிட்டுள்ளது. (ஐ)

## அமெ. - இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்தை ஏற்படுத்தும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த உடன்பாடு மூலம், இலங்கைத் தீவு அமெரிக்காவின் மற்றொரு ஒகினாவா அல்லது டியாகோ கார்சியா தளம் போல மாறும்.

திருகோணமலையில் 36,000 ஏக்கரில் சேவை நிலையம் ஒன்றை அமெரிக்கா அமைத்துக் கொள்வதற்கான வசதிகளை இந்த உடன்பாடு வழங்கவுள்ளது.

இந்த சேவை நிலையத்தில் பணியாற்றும் அமெரிக்கா அதிகாரிகளும், சிவிலியன்களும், இலங்கையின் அரசமைப்பு, குற்றவியல் அல்லது சிவில் சட்டத்துக்குட்பட்டு செயற்படுபவர்களாகவோ, இலங்கையின் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளின் கண்காணிப்புக்கு உட்பட்டவர்களாகவோ இருக்கமாட்டார்கள்.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகள் மற்றும் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பிரதிநிதிகளுக்கிடையில், நடத்தப்பட்ட பல சுற்று பேச்சுகளுக்குப் பின்னர் தயாரிக்கப்பட்ட வரைவு உடன்பாட்டின்படி, வியன்னா பிரகடனத்தின் கீழ் இராஜதந்திரத் தூதரகங்களில் பணியாற்றும் நிர்வாக மற்றும் தொழில்நுட்ப ஊழியர்களுக்கு உரித்தான சலுகைகள், விலக்குகள் மற்றும் முன்னுரிமை ஆகியன, இந்த சேவை நிலையத்தில் பணியாற்றும் அமெரிக்க அதிகாரிகள் வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்கர்கள், அமெரிக்க அடையாளத்துடன் குழுவாக அல்லது தனியான பயண உத்தரவுடன் இலங்கைக்குள் நுழையலாம், வெளியேறலாம். அமெரிக்காவினால் வழங்கப்பட்ட அனைத்து தொழில்துறை உரிமங்களின் செல்லுபடித் தன்மையை இலங்கை ஏற்றுக் கொள்ளும்.

இதன் அர்த்தம் என்னவெனில், இலங்கையின் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளால் அவர்கள் சோதனையிடப்படவோ, கண்காணிக்கப்படவோ கூடாது. போக்குவரத்து காவலர்களால் கூடச் சோதனையிடப்படக் கூடாது.

அமெரிக்கர்கள் மீது அமெரிக்க ஆயுதப்படை அதிகாரிகள் ஒழுக்காற்று கட்டுப்பாட்டின் முக்கியத்துவத்தை இலங்கை அரசு அங்கீகரிக்கிறது. இதன் மூலம், இலங்கையில் உள்ள அமெரிக்கர்கள் மீது குற்றவியல் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு அமெரிக்காவுக்கு அதிகாரம் அளிக்கப்படும். இதன் அர்த்தம், அவர்கள் தேசத்தின் சட்டத்தின் கீழ் வரமாட்டார்கள் என்பதாகும்.

அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தினால், இயக்கப்படும் கப்பல்கள் மற்றும் வாகனங்கள், இலங்கையின் பிராந்திய எல்லைக்குள் சுதந்திரமாக நுழையலாம், வெளியேறலாம் என்றும் அமெரிக்கத் தூதரகம் முன்மொழிந்துள்ளது.

இதன்போது, அத்தகைய வாகனங்கள் தரையிறங்குவதற்கான, தரித்து நிற்பதற்கான, துறைமுகத்தில் நிறுத்துவதற்கான, விமானிகளுக்காக, என இலங்கை அரசால் அறவிடப்படும் எந்தக் கட்டணமும், அறவிடப்படுவதில் இருந்து விலக்கு அளிக்கப்படும்.

இலங்கையின் பிராந்தியத்துக்குள், அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான அல்லது அதனால் இயக்கப்படும் விமானங்களைப் பறப்பதற்கும், தரிப்பதற்கும், மற்றும் ஏனைய வழிகளில் கட்டணங்கள் அறவிடப்படுவதில் இருந்தும் விலக்கு அளிக்கப்படும்.

அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களம், கோரப்பட்ட மற்றும் பெறப்பட்ட சேவைகளுக்கான நியாயமான கட்டணங்களை செலுத்தவேண்டும்.

அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தின் விநியோகங்கள், கருவிகள், தொழில்நுட்பங்களை இறக்குமதி செய்வதற்கு அல்லது ஏற்றுமதி செய்வதற்கு, எந்த உரிமங்களோ, கட்டுப்பாடுகளோ, சுங்க தீர்வைகளோ, வரிகளோ, வேறெந்த கட்டணங்களோ இலங்கைக்குள் அறவிடப்படாது.

அமெரிக்கத் தொழில்துறையினர் மற்றும் சாரதிகளுக்கான உரிமங்கள் தொடர்பிலும் அதே நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் என்று அமெரிக்கத் தூதரகம் முன்மொழிந்துள்ளது.

அமெரிக்க ஆயுதப்படைகளுக்குத் தேவையான வானொலி அலைக்கற்றைகளைப் பயன்படுத்தவும் சிறிலங்கா அரசு அங்கீகரிக்கும்.

தமது சொந்த தொலைத் தொடர்புமுறையைச் செயற்படுத்துவதற்கு, அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களம் அனுமதிக்கப்படலாம் – என்றார். (ஐ)

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்திருப்பதுடன், சர்வதேச குற்றவியல் விசாரணைக்குத் தயாராக இருக்குமாறும் எச்சரித்துள்ளன.

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியின் போதைப்பொருளுக்கு எதிரான யுத்தம் மனித உரிமை பேரழிவு எனத் தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் பிலிப்பைன்ஸுக்கான ஆராய்ச்சியாளர் கார்லோஸ் கொன்டே, உலகின் எந்த நாடும் இதனைப் பின்பற்றக்கூடாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் விவகாரத்தை வெறுமனே குற்றச்செயலாக மாத்திரம் கருதி முன்னெடுக்கப்பட்ட போதைப்பொருள்களுக்கு எதிரான யுத்தங்களால் அவற்றுக்குத் தீர்வைக் காண முடியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாறாக போதைப்பொருளுக்கு எதிரான யுத்தம் சொல்லொணா துயரத்தையும், சட்டத்தின் ஆட்சியின் அழிவையும் மனித உரிமைகளில் வீழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியைப் பின்பற்றுவது குறித்து சிறிசேன உறுதியாக உள்ளார் என்றால், அவர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணைகளை எதிர்கொள்ளத் தயாராகவேண்டும் என பிலிப்பைன்ஸின் மனித உரிமை அமைப்பான ஐ டிவென்ட் தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியின் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸின் முன்மாதிரியைப் பின்பற்றவேண்டாம் என ஆசிய நாடுகளின் தலைவர்களுக்கு நாங்கள் எச்சரிக்கை விடுக்கின்றோம் என ஐ டிபென்ட் அமைப்பின் பேச்சாளர் கூறியுள்ளார்.

போதைப்பொருள் விவகாரத்துக்கு ஜனநாயகக் கட்டமைப்புகளை அழிக்காத மாறாகப் பலப்படுத்தும் உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி மூலம் தீர்வைக் காண முயல வேண்டும் எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

# சர்வதேசக் குற்றவியல் மன்றில் இலங்கையை நிறுத்தும் தீவிரத்தில் நாடு கடந்த தமிழீழ அரசு











லண்டன், ஜன. 19

இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என்று பிரித்தானிய அரசாங்கம் ஒரு தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையில் முன் மொழியவேண்டும். அதற்காகப் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் ஒரு விவாதம் நடத்த வேண்டும். – இவ்வாறு கோரும் துண்டுப் பிரசுரங்கள் கடந்த தைப்பொங்கல் தினத்தன்று லண்டனில் கோயில்களில் கூடிய பக்தர்களிடம் விநியோகிக்கப்பட்டன.

இலங்கைத்தீவில் மனித உரிமைகளை மேம்படுத்துதல், இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தைப் பேணுதல், நடந்தேறிய பாரிய போர்க்குற்றங்கள், இனப்படுகொலைகள், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் போன்றவை சம்பந்தமாகப் பொறுப்புக்கூறல் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் 2015, 2017 இல் ஆம் ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட 30/1 ,34/1 இலக்கத் தீர்மானங்களில் கூறப்பட்ட விடயங்களை இலங்கை அரசாங்கம் முழுமையாக நிறைவேற்றத் தவறிவிட்டது.

இலங்கை அரசாங்கம் யுத்தத்தின் இறுதிக்கட்டத்தின் போது புரியப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களை விசாரிப்பதற்கு வெளிநாட்டு நீதிபதிகள், வெளிநாட்டு வழக்கறிஞர்களை உள்ளடக்கிய ஒரு நீதிமன்றத்தை இலங்கையில் உருவாக்க தவறிவிட்டது .காணாமல் போகடிக்கப்பட்டோர் தொடர்பில் இன்னும் உண்மைகள் கண்டறியப்படவில்லை. அரசியல் கைதிகள் பலர் இன்னும் சிறையில் வாடுகின்றனர். பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னும் சர்வதேசச் சட்டங்களின் தராதரங்களுக்கேற்ப திருத்தப்படவில்லை. இலங்கை இராணுவம் கைப்பற்றி வைத்துள்ள தமிழ் மக்களது காணிகள் இன்னும் அவர்களுக்கு முழுமையாகத் திருப்பிக் கொடுக்கப்படவில்லை .

தமிழ் மக்களுக்கெதிராக புரியப்பட்ட கொடூரங்களுக்கு நீதி வழங்குவதில் இலங்கை அரசாங்கம் எப்போதும் பின்னிற்கின்றது. இலங்கை அரசாங்கம், யுத்தக்குற்றங்களைப் புரிந்த இராணுவ வீரர்களை ஒருபோதும் விசாரணைக்குட்படுத்தி குற்றஞ்சாட்டப்போவதில்லை; பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஒருபோதும் நீதி வழங்கப்போவதுமில்லை என்பது வெளிப்படை உண்மை.

எனவே இலங்கை விவகாரத்தை தொடர்ந்தும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் வைத்துக்கொண்டு மீண்டும் மீண்டும் இலங்கை அரசிற்கு கால அவகாசம் வழங்குவது பாதிக்கப்பட்ட மக்களை மேலும் பாதிப்புக்குள்ளாக்குகின்றது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதியை நிலை நாட்டவும் இலங்கைத்தீவில் தமிழ் மக்களது இருப்பை உறுதிப்படுத்தவும் சர்வதேச சமூகத்தின் ஆதரவு மிக முக்கிய தேவைப்பாடாகும்.

எனவேதான் இவ்விடயத்தில் பிரித்தானிய அரசாங்கத்தின் ஆதரவை வேண்டி நிற்பதோடு தொடர்ச்சியாக அழுத்தங்களை மேற்கொண்டு வருகின்றது நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்.

2015 , 2017 இல் ஐ நா மனித உரிமைகள் கவுன்ஸிலில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களைக் கூட்டாக முன்மொழிந்த நாடு என்ற வகையில் பிரித்தானியா ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இவ்வருடம் மார்ச் மாதத்தில் வர இருக்கின்ற 40 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தவேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தி பிரித்தானிய நாடாளுமன்ற உத்தியோக பூர்வ வலைத்தளத்தில் ஒரு கையெழுத்து சேகரிப்பு மனு ஆரம்பிக்கப்பட்டு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மனித உரிமைகள் அமைச்சினால் UK REFER TO SRI LANKA TO ICC என்ற கையெழுத்து சேகரிப்பு செயற் திட்டம் பிரித்தானியாவில் கடந்த 5 மாதங்களாக முன்னெடுத்து நடாத்தப்பட்டு வருகின்றது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என்று பிரித்தானிய அரசாங்கம் ஒரு தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள். கவின்ஸிலில் முன்மொழியவேண்டும் என்று பிரித்தானிய நாடாளுமன்றத்தில் ஒரு விவாதம் நடத்த வைப்பதற்கு 100,000 கையெழுத்துக்களைச் சேர்க்க வேண்டிய தேவை உள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மனித உரிமைகள் அமைச்சர் பத்மநாபன் மணிவண்ணன் தலைமையில் இச்செயற்திட்டத்திற்கான பிரதான ஒருங்கிணைப்பாளர்களான சோபனா ஜீவரட்ணம் குஜியந்தன் சிவபாலன் இருவரது ஒருங்கிணைப்பில் பிரித்தானியாவில் இக்கையெழுத்து சேகரிப்பு மிகவும் மும்முரமராக முன்னெடுத்து நடத்தப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் கடந்த செவ்வாய்க்கிழமை (15/01/2019) தமிழர் திருநாள் தைப்பொங்கல் அன்று பிரித்தானியாவில் உள்ள பதினைந்திற்கும் மேற்பட்ட இந்து ஆலயங்களில் வழிபாட்டிற்கு கூடியிருந்த பெருமளவிலான தமிழ் மக்களிடம் கடுங்குளிரிலும் துண்டுப்பிரசுரங்களை வழங்கி கையெழுத்துக்களை சேகரிப்பதில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாட்டாளர்கள் மும்முரமாக ஈடுபட்டனர்.(உ)

# 1000 ரூபா அடிப்படைச் சம்பளத்தை உறுதி செய்!




## தலைநகரில் நேற்று ஆர்ப்பாட்டம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளத்தை உறுதி செய்யுமாறு கோரி தலைநகரில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பெருந்தோட்ட உழைப்புரிமை ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக நேற்றுச் சனிக்கிழமை இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதன்போது, ‘ஒரு வார வேலைநிறுத்தம் 1.25 பில்லியன் நட்டத்தை ஏற்படுத்தும்! – அரசே குறுக்கிடு’, ‘தோட்டக் கம்பனிகளே, தொழிற்சங்கங்களே, அரசாங்கமே 1000 ரூபா அடிப்படை சம்பளத்தை உறுதிசெய்!’ போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை தாங்கியவாறு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வை வலியுறுத்தி மலையகத்திலும், தலைநகரிலும் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.01.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.